# ஆயுதங்கள் ஒப்படைக்காதவர்களை கண்டுபிடிக்க தேடுதல் நடவடிக்கைகள் திடீரென ஆரம்பம்!

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 29 ஷஃபான் பிறை: 15 இதழ்: 28
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13-03-1990

(கொழும்பு)
நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இதுவரை ஆயுதங்களை ஒப்படைக்காதவர்களைக் கண்டுபிடிப்பதற்காக கொழும்பில் நேற்று முன்தினம் மிகப்பெரிய அளவிலான தேடுதல் நடவடிக்கை ஒன்றை அரசாங்கம் மேற்கொண்டது.

ரத்தொலுவ வீடமைப்புத் திட்டத்தில் இந்தத் தேடுதல் நடவடிக்கை முதல்முதலாக மேற்கொள்ளப்பட்டது. இந்த வீடமைப்புத் திட்டத்தில் மொத்தம் 2200 வீடுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒரிஸ்ஸா சென்ற குழுவில் ஆண்கள் நாடு திரும்புவர்

[லண்டன்]
பெண்களும். குடும்பத்தவர்களும் ஒரிஸ்ஸாவில் தங்குவார்கள் ஆண்கள் இலங்கைக்குத் திரும்புவார்கள்.

ஈ. பி ஆர். எல். எவ். இயக்கத்தின் அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு பி. பி ஸிக்கு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னுள் முதல்வர் திரு. வரதராஜப் பெருமாள் நாடு திரும்பும் நிலையில் வாழ்வதற்காக வெளிநாடு செல்லவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் முழுக்கட்டுப்பாட்டில் திருமலை நகரம்!

(நமது நிருபர்)
**திருகோணமலை நகரை, இன்று அல்லது நாளை தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

திருமலை நகரை முற்றுகையிட்டுள்ள விடுதலைப் புலிகள் இன்று அல்லது நாளை நகரத்தை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதற்காக படிப்படியாக நகரை நோக்கி முன்னேறி வருகிறார்கள்.

மூன்றும் கட்டையில் இதுவரை தங்கியிருந்த புலிகள் நேற்று அனுராதபுரம் சந்திப் பகுதியை அடுத்துள்ள நகர எல்லையான பாலையூற்று, யாமாளியா பகுதிகளுக்குள் சென்று புலிக்கொடிகளைப் பறக்க விட்டுள்ளனர்.

புலி உறுப்பினர்கள் நகரை நோக்கி முன்னேறி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

நகரிலிருந்து நேற்று முன்தினம் அமைதிப்படையினர் வெளியேறி எட்டு மைல்களுக்கு அப்பால் உள்ள சீனன்குடாவிற்கு சென்றுவிட்டனர். தற்போது நகரிலுள்ள ஈ.பி.ஆர் எல். எப். ஈ. என்.

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திய அமைதிப்படை இம்மாத முடிவுக்குள் முற்றாக வெளியேறும் இந்திய ஜனாதிபதி உறுதி

(புதுடில்லி)
இலங்கையிலிருந்து இம்மாத முடிவிற்குள் இந்திய அமைதிப் படை முற்றாக வெளியேறிவிடும் என்று இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

இந்திய ஜனாதிபதி முதற் தடவையாக படை வெளியேற்றம் பற்றி இப்பொழுதுதான் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றங்களின் இரு அவையினதும் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி

(8ம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிக்கப்படுவதை எதிர்த்து நேற்று காரைநகரில் மாபெரும் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்படுவதை எதிர்த்து நேற்று காரைநகரில் ஊர்வலம் ஒன்று இடம்பெற்றது.

ஊர்வலத்தின் முடிவில் விடுதலைப் புலிகளின் தீவுப் பகுதிப் பொறுப்பாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

கடற்படை, முகாமிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரம் வரை முட்கம்பி வேலி அமைத்து, வீதியோரத்தில் 'சென்றி'களையும் அமைத்துவருகின்றது. இதனால் அப்பகுதிப் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மேலும் சீ-நோர், போக்குவரத்துச் சேவை, மீன்பிடித்துறைமுகம், சிறுவர் பாடசாலை, கோயில்கள், மயானம், கடற்றொழில், கமத்தொழில் முதலியன பாதிப்பிற்குள்ளாகியுள்ளன.

இதனை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரியே பெரும் ஊர்வலம் நடைபெற்றது.

(8ம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகள் நினைவுத் தூபி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)
சுகி (நீர்வேலி), இமல்டா (குருநகர்) பெண் போராளிகளின் இரண்டாம் ஆண்டு நினைவாக இன்று செவ்வாய்க்கிழமை நீர்வேலியிலும், குருநகரிலும் நினைவுத்தூபி திறப்பு விழாவும், நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை முடிவு நேற்று வெளியானது

(யாழ்ப்பாணம்)
கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று யாழ்.வந்துசேர்ந்தன.

யாழ். மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகளுக்கு நேற்றைய தினமே முடிவுகள் கிடைத்துள்ளன.

(8-ம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகும்

(தலைமன்னார்)
இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி இருப்பதாகவும், இந்தியத் தரப்பிலிருந்து பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும், மன்னார் சுங்க ரயில்வே வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இதுவரை காலமும் தலை

(8ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முஸ்லிம்காங்கிரஸ் எதிர்ப்பு

(திருகோணமலை)
வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்படுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவிற்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளது.

அதேநேரத்தில் இது சம்பந்தமாக வடக்கு-கிழக்கு மாகாணசபை எதிர்க் கட்சித் தலைவர் ஜனாப் எம். எச் சேகு இஸாகுத்தீன் ஜனாதிபதிக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் பிரதேசங்களில் நிறுவனங்களிலுள்ள பிரச்னைகளை இனங்கண்டு தீர்த்து வருகிறோம்" - டொமினிக்

(யாழ்ப்பாணம்)
''இன்றைக்கு இருக்கும் அரசியல் சூழ்நிலைகளில் எதுவும் எந்நேரமும் நிகழலாம் இதனால் தமிழ்ப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை நாம் தளர்த்தி நிறுவனங்களிலுள்ள பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வருகின்றோம்.

இவ்வாறு தெங்கு பணம் பொருள் கூட்டுறவுச்சங்க உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு எஸ். டொமினிக் தெரிவித்தார்.

இக்கூட்டம் பனை அபிவிருத்தியை துரிதப்படுத்தி புதிய தொழில்துறைகளை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகளை காண்பதற்காக இத்துறையோடு இணைந்தவர்களுக்காக கூட்டப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி மாவட்ட பொறுப்பாளர் திரு.

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசியல் தலைவர்களை சந்திக்க வரதர் புதுடில்லி பயணம்?

(கொழும்பு)
நேற்று முன்தினம் குடும்ப சகிதம் நாட்டைவிட்டு வெளியேறிய வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வர் திரு வரதராஜப்பெருமாள் புதுடில்லி சென்றிருப்பதாக கொழும்புக்குத் தகவல் கிடைத்திருப்பதாக அறியவந்துள்ளது.

புதுடில்லியில் அரசியல் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு அவர் அங்கு சென்றிருப்பதாகவும் அவர் தற்போது ஒரிஸ்ஸாவில் தங்கியிருக்கவில்லை எனவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு வரதராஜப்பெருமாள் குடும்பசகிதம் ஒரிஸ்ஸாவிற்குப் போய்ச் சேர்ந்தார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## வடக்கு - கிழக்கு மாகாணசபை இந்தியப் படை வெளியேறியதும் இறுதி நடவடிக்கை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாண சபையின் எதிர்காலம் குறித்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இந்திய அமைதிப்படையினர் முற்றாக வெளியேறிய பின்னரே நடவடிக்கைகளை மேற்கொள்ளுவாரெனத் தெரியவருகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நாடகநூல்கள்

O/L தமிழ் மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. அதைக்கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டே இரண்டு நூல்கள்:
1. கெட்டிக்காரர்கள் ரூ. 25/-
2. முதலாம் பிள்ளை ரூ. 30/-
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய 19 வானொலி நாடகங்கள். (சி 3591)

### காணவில்லை

கோப்பாய் தெற்கு இராச வீதி, அருளம்பலம் அன்னமலரின் தோட்டத்திலுள்ள மோட்டர் ரிப் சுவிச், சுவிச் அனைத்தும் காணவில்லை. இதைப்பற்றி தகவல் தெரிந்தால் தயவு செய்து உடன் எம்முடன் தொடர் கொள்ளவும். தகுந்த சன்மானம்வழங்கப்படும். V. அருளம்பலம் இராச வீதி, கோப்பாய் தெற்கு. சி-3595

## ஜி. ஸி. ஈ. பரீட்சை மாணவர்களுக்கு
# ஆட்பதிவுத் திணைக்கள அடையாளஅட்டை வழங்குவதில் தாமதம் ஏற்படலாம்

(யாழ்ப்பாணம்)
கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பதினாறு வயதைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு, உரியகாலத்தில் ஆட்பதிவுத் திணைக்கள அடையாள அட்டை வழங்கப்பட மாட்டாது எனத்தெரிய வருகிறது.

ஆட்பதிவுத் திணைக்கள அடையாள அட்டைக்குப் பதிலாக தபால் அடையாள அட்டை போன்ற ஆவணங்களை பாடசாலை அதிபர்கள், பெற்றோர் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் திரு. பந்துல குலதுங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து ஆட்பதிவுத்திணைக்கள அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை எனத் தெரிகிறது. இதற்குப் பதிலாக பிரதி அடையாள அட்டை வழங்கும் முறை நடைமுறையிலுள்ளது. ஜி. ஸி ஈ. பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறலாம் எனத் தெரிகிறது. (152)

# ஆசிரிய கலாசாலையை
## பலாலிக்கு மாற்றக் கோரிக்கை

(அச்சுவேலி)
''பலாலி ஆசிரிய கலாசாலையை மீண்டும் பலாலியில் செயற்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படல்வேண்டும். சிங்கள மொழிக்கான ஆசிரியர் கலாசாலைகள், கலைலூரிகள் விஸ்தரிக்கப்படும் நிலையில்; தமிழாசிரியர்களுக்கான பயிற்சிக் கலாசாலைகள் மூடப்படுவதும், மூடக்கப்படுவதும் கண்டிக்கப்படவேண்டும்'' என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர், கல்வி அமைச்சு, ஆசிரியர் கலாசாலை பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் ''கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் பலாலியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டு தற்காலிகமாக கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் கலாசாலை செயற்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மிகக் குறைந்த வசதிகளுடன் செயற்பட்டு வருகின்றது. இந்தநிலை ஆசிரியர்களின் பயிற்சிக்கும், பயிற்சி தொடர்பான செயற்பாடுகளுக்கும் குந்தகம் விளைவிப்பதற்கு அமைந்துள்ளது பலாலி ஆசிரிய கலாசாலைக் கட்டடங்களிலிருந்து ராணுவம் வெளியேறி இருப்பதால் பலாலி ஆசிரியர்கலாசாலையை உடனடியாக கோப்பாயில் இருந்து மாற்றி பழைய இடத்தில செயற்பட ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று கேட்கப்பட்டுள்ளது. (74)

## கஷ்டம் நீங்கியது

(காங்கேசன்துறை)
வலி. வடக்குப் பகுதியைச் சேர்ந்த கிராமசேவையாளர்களுக்கு நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நற்சான்றிதழ் படிவங்களும் ஏனைய படிவங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

வலி வடக்குப் பகுதி கிராம சேவையாளர்களுக்கு நீண்டகாலமாக நர்சான்றிதழ் படிவங்கள் வழங்கப்படாமையால் அவர்கள் பொதுமக்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்க முடியாதநிலை இருந்துவந்தது. பொதுமக்கள் இப்படிவங்களை வெளியில் விலை கொடுத்து வாங்கியே கிராமசேவையாளர்களிடம் நற்சான்றிதழ்களைப் பெற்று வந்தனர்.

பிறப்பு, இறப்புகளை பதிவு செய்யும் படிவம் போன்றவையும் கிராமசேவையாளர்களுக்கு வநது சேர்ந்துள்ளன. (86)

# சிறு கைத்தொழில்களை பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்திலுள்ள சிறுகைத்தொழில்களை பதிவு செய்வதற்குசிறுகைத்தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்தகாலங்களில் சிறுகைத்தொழில்களைப் பதிவு செய்யும் பணி கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் தான் நடைபெற்றுவந்தது மாகாண நிர்வாக பரவலாக்கத்தின் திட்டத்தினால் இது இப்போது யாழ் மாவட்டத்திலும் நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி முதல் யாழ் மாவட்ட சிறுகைத்தொழில் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாமென

(5ம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை
# தமிழ் எழுத்தாளருக்கு மாநகரசபை கௌரவம்

(யாழ்ப்பாணம்]
''கடந்த சில வாரங்களாக அதிகமான ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்களைப் படித்து வருகின்றேன். அவர்கள் மேல் ஒரு கரிசனை பிறந்திருக்கிறது. அத்தோடு யாழ். மாநகரசபையும் வழமையாக எழுத்தாளர்களை கௌரவிக்கும் பண்பின் தொடரில் தென்னிலங்கையிலிருந்து வந்திருக்கும் எமது தமிழ் படைப்பாளிகளாகிய உங்களை யாழ்ப்பாண மக்கள் சார்பில் வரவேற்கிறேன்''.

இவ்வாறு யாழ். மாநகரசபையில் தென்னிலங்கையிலிருந்து 'மல்லிகை' மலர் வெளியீட்டு விழாவுக்கு வந்திருந்த எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப், அந்தனி ஜீவா, திக்வெல்லைக் கமால், மேமன்கவி ஆப்தீன், சமத் போன்றோரை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தேநீர் விருந்தளித்து கௌரவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''மாநகரசபையினராகிய நாங்கள் குப்பை கூழங்களை அகற்றுவது போன்று எழுத்தாளர்கள் மக்களுக்குள்ள அழுக்கை போக்க எழுத வேண்டும். அவர்களுக்கு வெளிச்சத்தை காட்டுங்கள்'' என்று குறிப்பிட்டார்.

எழுத்தாளர் செங்கை ஆழியான் பேசுகையில்: ''ஒரு நாட்டுக்குள் இன்னொரு நாட்டுப் பிரமுகர்கள் வந்தால் முதலில் அந்த மாநகரசபை முதல்வரே வரவேற்பது வழக்கம். இந்தப்பேறு தென்னிலங்கையிலிருந்து வந்த எழுத்தாளர்களாகிய உங்களுக்கு கிடைத்திருக்கின்றது. இதைக் கருத்திற்கொள்ளுமிடத்தில் பொதுவாக யாழ்ப்பாண நகரமே உங்களை வரவேற்று இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்.

தகவம் அமைப்புக்குழுப் பொறுப்பாளர் வ. அ. இராசையா தமதுரையில், ''நாங்கள் கொதிப்பான நிலையிலிருந்து இப்போது கொஞ்சம் ஆறுதல் நிலைக்கு வந்திருக்கிறோம். வெளியே வந்த சில மாதங்களில் படைப்பாளிகளின் வேகமும் வளர்ச்சியும் மேலோங்கி நிற்கின்றன'' என்றார்.

தேநீர் விருந்துபசாரத்தில் திரு. டொமினிக்ஜீவா, நெல்லை க. பேரன், டாக்டர் முருகானந்தன், தெளிவத்தை ஜோசப், மேமன் கவி ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

# பயிற்சி பெற்றும் சான்றிதழ் இல்லை!

[அச்சுவேலி]
கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தங்களது பயிற்சிச் சான்றிதழ்களைப் பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

மேற்படி ஆசிரியர் கலாசாலை மூடப்பட்டதால் சான்றிதழ்களை எங்கே பெற்றுக் கொள்வது என்று ஆசிரியர்கள் அலைந்து திரிகின்றனர்.

கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தமது பதவியுயர்வு மற்றும் தேவைகளுக்குரிய முறையில் ஆசிரியர் பயிற்சி தொடர்பான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கமுடியாமல் திண்டாடுகின்றனர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் ஆசிரிய கலாசாலை பிரிவுககும் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்கங்களின் கவனத்திற்கும் கொண்டுவந்தபோதிலும் உரியபலன் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (74)

# மருந்துகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)
யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் மற்றும் சுகாதாரத் திணைக்கள சிகிச்சை நிலையங்களுக்கும இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகள் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினரால் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேரடியாக லொறி மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மருந்துவகைகள் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் திகதி விபரங்கள் அடங்கிய சுற்றுநிருபம் ஒன்று சகல நிறுவனங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும், யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுளளது.

இதன் பிரகாரம் இம்மாதம் 15-ம் திகதி வேலணை, ஊர்காவற்றுறை, அனலைதீவுவைத்தியசாலைகளுக்கும், 19ம் திகதி கொக்குவில், கோண்டாவில், உரும்பராய், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை, காங்கேசன்துறை ஆகிய வைத்தியசாலைகளுக்கும், 23ம் திகதி பருத்தித்துறை, அச்சுவேலி, கோப்பாய் ஆகிய வைத்தியசாலைகளுக்கும் 27ம் திகதி கிளிநொச்சி, வட்டக்கச்சி, ஆனையிறவு, வன்னேரிக்குளம் ஆகிய வைத்தியசாலைகளுக்கும், 29-ம் திகதியன்று உருத்திரபுரம், கண்டாவளை, தர்மபுரம், பூநகரி, முழங்காவில், வேராவில், இரணைதீவு வைத்தியசாலைகளுக்கும், அடுத்தமாதம் 3ம் திகதி வட்டுக்கோட்டை. தொல்புரம், காரைநகர் ஆகிய வைத்தியசாலைகளுக்கும், 5-ம் திகதி மானிப்பாய், சங்கானை, அளவெட்டி, பண்டத்தரிப்பு ஆகிய வைத்தியசாலைகளுக்கும் 10ம் திகதி குருநகர், மண்டைதீவு ஆகிய வைத்தியசாலைகளுக்கும் யாழ் மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கும் மருந்துவகைகள் விநியோகம் செய்யப்படவுள்ளன. (72)

## பாடசாலை அபிவிருத்திக்கு
# பெற்றோர், பழைய மாணவர் உதவ முன்வரவேண்டும்"

(நாவற்குழி)
பெரிய பாடசாலைகளைவிட சிறிய பாடசாலைகளே இன்று கல்வியில் தரம் கூடியதாகக் காணப்படுகிறது. பெரிய பாடசாலைகளில் மாணவர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். சிறிய பாடசாலைகளில் மாணவர்கள் குறைவாகக் காணப்படுகிறார்கள். அதனால் அங்கே தரமான கல்விபுகட்டப்படுகிறது.

கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கைதடி கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களை நாம் திணைக்களத்திலிருந்து கேட்டுப் பெறலாம். ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கு திணைக்களத்தை முழுமையாக நம்பியிராமல் பெற்றோர்களும், பழைய மாணவர்களும் பங்குடுத்துச் செய்ய வேண்டும் என்றார்.

போட்டி முடிவில் திரு. கணேசலிங்கம் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசிலை வழங்கினார்.

எல்லாளன் இல்லம் 133 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், சங்கிலியன் இல்லம் 84 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இப்போட்டிக்கான பரிசுப் பொருட்களை கைதடி தமிழீழ விடுதலைப்புலிகள் மகசள் முன்னணியினரும், வர்த்தகர்களும் பழைய மாணவர்களும் வழங்கியிருந்தனர். (107)

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** எனது மாமனார அனுப்பிய காசுக்கட்டளையை (Money order)த் தொலைத்துவிட்டேன். அந்தப் பணத்தை மீண்டும் பெறுவது எவ்வாறு?

எஸ். கனகசபாபதி, பருத்தித்துறை

**பதில்:** நீங்கள் சம்பந்தப்பட்ட தபாலகத்திற்குச் சென்று காசுக்கட்டளை முறைப்பாட்டுப் பத்திரத்தை (P O C 70a) நிரப்பிக் கொடுக்கவேண்டும். அவர்கள் காசுக்கட்டளைக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிப்பார்கள். பின்பு உங்களுக்கும் சம்பந்தப்பட்ட தபாலகத்துக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. காசுக்கட்டளை கட்டுப்பாட்டாளர் (கொழும்பு) பரிசீலனை செய்து பிரதிக் காசுக்கட்டளை வழங்குவார். (152)

# லைசென்ஸ் பெறமுடியாத நிலையில் யாழ். சாரதிகள்!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் செயலகத்தில் மோட்டார் வாகனப்பதிவுத் திணைக்களம் இயங்கிய போதிலும், புதிதாக சாரதிகளுக்கு லைசென்ஸ் வழங்க முடியாதிருப்பதாக அறியப்படுகிறது.

மோட்டார்க் கார்ச்சாரதிகளை சோதனை செய்யும் அதிகாரி இதுவரை நியமிக்கப்படாததுதான் காரணமாம், (152)

பலவருட முறுகலைத் தவிர்க்க

# பலஸ்தீனியர்களுடன் சமாதானப் பேச்சு:

# இஸ்ரேல் அரசு பிளவுபடும் நிலை

## அமைச்சர்கள் வெளிநடப்பு

(டெல்அவிவ்)

**பலஸ்தீனியர்களுடன் சமாதானப் பேச்சுக்களில் இஸ்ரேல் ஈடுபடவுள்ளதாக வெளியிடப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து இஸ்ரேலின் கூட்டு அரசாங்கம் பிளவுபடும் ஓர் இக்கட்டான நிலை தோன்றியுள்ளது.**

கடந்த பல வருடங்களாக இரு பகுதியிடையேயும்முறுகல் நிலையை தவிர்க்க இருதரப்பும் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளன. இப் பேச்சுக்களிற்கு அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்துள்ளது. இந் நிபந்தனைகளே இஸ்ரேல் அரசை பிளவுபடும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

பலஸ்தீனியர்களின் தாயகப் பகுதியிலிருந்து யூதர்கள் வெளியேறவேண்டும, புதிய குடியேற்றங்கள் எதுவும் இடம்பெறக் கூடாது, இஸ்ரேலியர் குடியேறியுள்ள பலஸ்தீனிய பகுதியைச் சேர்ந்தவர்களும் பேச்சுக்களில் கலந்து கொள்வா என்பதும் நிபந்தனைகளில் சிலவாகும்,

மேற்படி அமெரிக்காவின் நிபந்தனைகளை கூட்டு அரசாங்கத்தின் ஒரு கட்சியான 'லிக்குவிட்' கட்சி சில நிபந்தனைகளை ஏற்க இணங்கியுள்ளது. ஆனல் மற்றக் கட்சியான 'தொழிற்கட்சி' வன்மையாக கண்டித்துள்ளதுடன் இந்நிபந்தனை எச்சந்தர்ப்பததிலும் ஏற்றுக் கொள்ளப்படாது என கூறியுள்ளது.

நேற்று முன் தினம் அரசு தரப்பு அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. இதன்போது ஒருசந்தர்ப்பத்தில் இரு தரப்பினரிடையேயும் கடும் வாக்குவாதம் நடைபெற்றது. இதை யடுத்து தொழிற்கட்சி அமைச்சர்கள் கூட்டத்தை பகிஷ்கரித்து வெளிநடப்புச் செய்தனர். எனினும் பிரதமர் மேற்கொண்ட பல முயற்சிகளும் பலனளிக்கவில்லை. (சி)

# கட்சித் தலைவர்களை ஹமீத் மீண்டும் சந்திக்கிருர்

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடு நடைபெற முன்னர் சகல கட்சிகளுடனும் மீண்டும் தனித்தனி சந்திப்பில் அமைச்சர் ஜனப் ஏ.சி. எஸ். ஹமீத் ஈடுபட்டு வருகிருர்.

சர்வகட்சி மாநாட்டில் வடக்கு - கிழக்கு நிலைமை முக்கியமாக ஆராயப்படவுள்ளதால் இச்சந்திப்பு இடம்பெற்றுவருகிறது.

இதன் பொருட்டு அமைச்சர், சர்வஜனவாக்கெடுப்பு, சட்டம் ஒழுங்கு நடவடிக்கை ஆருவது சட்டமூல திருத்த கோரிக்கை, குடியேற்றம் குறித்து மேற்படி கட்சிகளுடனும் குழுக்களுடனும் பேச்சுக்கள் நடாத்தி வருகிருர்.

வடக்கு - கிழக்கில் நிலைமை சுமுகமாகி வருவதால் ஒவ்வொரு நடவடிக்கையும் தீவிரமாக ஆராயப்படவேண்டியதாயிருக்கிறதென்றும் அமைச்சர் ஹமீத் தெரிவித்தார். [சி]

# லண்டன் மாநகர் வீதிகளில் தட்சரின் கொடும்பாவி எரிப்பு

## பதவி விலகுமாறும் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரின்'கொடும்பாவி' லண்டன் மாநகர் வீதிகளில் பரவலாக எரிக்கப்பட்டு இவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

புதிதாக பிரிட்டனில் அமுல் செய்யப்பட்டுள்ள 'வரிகளை' எதிர்த்தே இந்த ஆ ப்பாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்த வரிவிதிப்பு திருமதி தட்சரின் எதிர்காலத்தை மிக மோசமாகப் பாதிக்கும் என அவதானிகள் கூறியுள்ளனர்.

பிரிட்டனின் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவே திருமதி தட்சர் மேற்படி வரி விதிப்பை அமுல்படுத்தியுள்ளார். ஆனல் இது சகல மட்ட மக்களையும் வெகுவாகப்பாதித்துள்ளது.

கடந்த சில தினங்களாக திருமதி தட்சரை பதவிவிலகக் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பலமா நிலங்களிலும் இடம்பெற்று வருகின்றன. திருமதி தட்சரின் கொடும்பாவி பல இடங்களிலும் கொளுத்தப்பட்டும் வருகிறது.

இது பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கையில்; திருமதி தட்சரின் அரசியல் வாழ்வு இந்த பொருளாதார நெருக்கடியுடன் முடிவுறும் எனவும் கூறினர். (சி)

# நுண்கலைப் பகுதியில் தெரிவாஞேர்

(அச்சுவேலி)

யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப்பகுதியில் இந்த வருடம் வீணை, மிருதங்கம், வயலின் பாடநெறிக்கு 19பேர் தெரிவாகினர். வீணைப் பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விபரம்:—

செல்விகள்: எம். அனுஷா, வி. சுதாமதி, எஸ். நிர்மலா, ட. பிறேமா, வி. வரலட்சுமி, வி. காயத்திரி, எஸ். எஸ். கௌரி.

மிருதங்கம் பாடநெறிக்கு:— திரு. எஸ். பாலச்சந்திரன், திரு. எம். கேசவன்.

வயலின் பாடநெறிக்கு 10 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். விபரம்:—

பி. ஞானவரதன், செல்விகள்: பி. உஷா' எஸ். சாந்தினி, எம். தட்சினி, வி. ஸ்ரீரஞ்சினி, ரி. ஜெயந்தினி, வி. இந்துமதி, எஸ். ஸ்ரீராதா, ஆர். கலாரஞ்சினி, எஸ். சுபதினி.

# அமெரிக்கப் பெண்மணி

## இந்தியாவில் உண்ணுவிரதம்

(கல்கத்தா)

அமெரிக்கப் பெண் மணி ஒருவர் இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் காலவரையறையற்ற 'உண்ணுவிரதத்தைமேற்கொண்டுள்ளார். பொலிசாரினல் தாம் தாக்கப்பட்டதைக் கண்டித்து அவர் தான் சிகிச்சை பெற்றுவரும் மருத்துவநிலையத்தில் இந்த உண்ணுவிரதத்தை மேற்கொண்டுள்ளார்.

அகதிகளுக்கான ஐ.நா வின் அலுவலகத்தில் பணியாற்றும் திருமதி பி.ஈ. மண்டே (வயது 46) என்பவரே இந்த உண்ணுவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். இதையடுத்து தற்போது அந்த மருத்துவமனைக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

'ஆனந்த மார்க்' என்ற அமைப்பைச் சேர்ந்த இவர் அரசவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதான குற்றச்சாட்டின்பேரில் பொலிசார் இவரை விசாரணைக்குட்படுத்தினர். அதன்போது இவர் மீது தாக்குதலும் நடாத்தப்பட்டுள்ளது. உடலில் வெளிக்காயங்களுடனேயே இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனக்கு நீதியான தீர்ப்புக் கிடைக்கும் வரை இந்த உண்ணுவிரதத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். இதேவேளை இவருக்கு உயிராபத்து ஏற்படும் பட்சத்தில் அதற்கு மாநில அரசே பொறுப்பு என 'ஆனந்த மார்க்' அமைப்பின் தலைவர் சுவாமி சம்பூரணனந்தா தெரிவித்துள்ளார். (சி)

# சிலியில் ஜனநாயக ஆட்சி:

## இராணுவம் ஆட்சியை ஒப்படைத்தது!

(லண்டன்)

சிலியில் கடந்த 17 வருடங்களாக இடம்பெற்ற இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. புதிய ஜனநாயக ஆட்சித் தலைவராக திரு. பற்றிசோ எல்வின் பதவியேற்றுள்ளார். இதற்கான சம்பிரதாயபூர்வவைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இராணுவ ஆட்சிபீடத்தின் வேண்டுகோளின் பேரிலேயே இந்த ஆட்சிப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது. 1973ம் ஆண்டுமுதல் இங்கு இராணுவ ஆட்சி இடம்பெற்றுவந்தது. இராணுவத் தளபதி ஜெனரல் அகஸ்தோ பினுஷே ஆட்சித் தலைவராக இருந்துவந்தார்.

சிலியில் நேற்றிரவு இந்த ஆட்சிப் பரிமாற்றம் நடைபெற்றது. இதனை அந்தநாட்டு மக்கள் வெகுவாக வரவேற்றுள்ளனர். கடந்த 17 வருடங்களில் தாம் அனுபவித்த துன்பங்கள் தீர்ந்துவிட்டதாகவும் அவாகள் தெரிவித்தனர்.

கடந்த 17 வருடங்களில் சிலியில் மனித உரிமை மீறல் மிக மோசமாக நடைபெற்றுள்ளது. இக்காலப்பகுதியில் 25,000க்கும்மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும், படுமோசமாக மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் 'சர்வதேச மன்னிப்புச் சபை' குற்றம் சாட்டியுள்ளது.

புதிய அதிபர் திரு பற்றிசோ எல்வின் பதவியேற்றபின் ஆற்றிய உரையில், சிலியில் மனித உரிமைகள் பேணப்பட சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்று கூறியுள்ளார்.

இதேவேளை இராணுவஆட்சி பரிமாற்றம் செய்யப்பட்டதை பல இராணுவத்தினர் எதிர்த்துக் களர்ச்சி செய்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

# கொலம்பிய 'கெரில்லா' குழு தேசியநீரோட்டத்தில்இணையும்

## ஏனைய குழுக்களுக்கும் அழைப்பு

(பொகோடா)

கொலம்பியாவில் கடந்த 20 வருடங்களாக கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டு வந்த முக்கிய குழுஒன்று ஜனநாயக தேசிய நீரோட்டத்தில் கலக்க முன்வந்துள்ளது. இதன் ஒரு நடவடிக்கையாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

மார்க்ஸிஸ எதிர்ப்புக் குழுவான 'எம்-19' என்ற இக்குழு அங்கு பெரும் செல்வாக்கைப் பெற்ற ஒரு குழுவாகும். இதைவிட கொலம்பியாவில் வேறு 3 குழுக்களும் இயங்கிவருகின்றன.

எதிர்வரும் 18-ம் திகதி கொலம்பியாவில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் பங்கு பற்றவும் இந்த 'எம்-19' குழு முன்வந்துள்ளது. இதற்காக அது தன்னை ஓர் அரசியல் கட்சியாகவும் பதிவுசெய்துள்ளது. இதன் தலைவர் திரு. கார்லோஸ் பிஷாரோ கொலம்பியாவன் தலைநகர் பொகோடாவில் வேட்பாளராகவும் போட்டியிடவுள்ளார்.

இந்த கெரில்லா அமைப்பு தேசிய நீரோட்டத்தில் கலந்திருப்பதை அதிபர் திரு வேர்ஜிலியோ பார்கோ வரவேற்றுள்ளார். ஏனைய குழுக்களும் இதனை பின்பற்றவேண்டுமென்றும் அவர்களும் தேர்தலில் போட்டியிடலாமென்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (சி)

## உணவு, மருந்து வகைகளில்

# மோசடி, கலப்படம்

## தடுப்பது பற்றி ஆராய்வு

(காங்கேசன்துறை)

உணவு, மருந்து வகைகளில் மோசடி, கலப்படம் செய்யப்படுவதைத் தடுப்பது தொடர்பான கருத்தரங்கு இன்று தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற உள்ளது.

உணவு, மருந்துவகைகளில் கலப்படம் செய்யப்படுவதால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்தும், அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும், இப்படியான குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் வழங்கப்படும் தண்டனைகள் குறித்தும் இக்கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படும்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன், யாழ். மாவட்ட உணவு, மருந்து வகைகள் கலப்பட கண்காணிப்பு அதிகாரி திரு. த. மகாதேவன் ஆகியோர் உட்பட பல சுகாதார அதிகாரிகள் இக்கருத்தரங்கில் உரையாற்றுவர்.

இப்பகுதியைச் சேர்ந்த உணவு, மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் அமைப்புகளையும், வியாபாரம் செய்யும் நிறுவனங்களையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

(86)

## மணிவாக்கு

''பனையளவு உயர்ந்த உபதேசத்தைவிட தினையளவு சிறிய நடைமுறையே சாலச் சிறந்தது''

— மநுதர்ம நீதி.

# நமது நோக்கு

## பாலர்கள் பலி பார்த்திருக்க முடியுமா?

யாழ். குடாநாட்டில் வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

யாழ். மருத்துவமனையில் சென்ற மாதம் 18குழந்தைகளும், இம்மாதம் முதல் வாரம் 6 குழந்தைகளும் இந்த நோய்க்குப் பலியாகியுள்ளனர்.

இவ்வருடத்தில் இற்றைவரை 367 குழந்தைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மானிப்பாய், ஆனைக்கோட்டை, காரைநகர் போன்ற சில குறிப்பிட்ட இடங்களில் இந்த நோய் மிகத் தீவிரமாகப் பரவியுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் ஏனையபகுதிகளில் இந்த நோய் பரவும் தீவிரம்பற்றிய தகவல்கள் பூரணமாகக் கிடைக்கவில்லை.

இந்தநோய் மேலும் பரவாதிருக்க சம்பந்தப்பட்டவர்கள் உரியகவனம் செலுத்துவார்கள் என நம்புகிறோம். இந்தநோய் பரவுவதற்கான முக்கிய காரணம் என்ன? அசுத்த நீரினாலேயே இந்த நோய் பெருமளவு பரவுகின்றது என குழந்தைகள் பிரிவு டாக்டர் திருமதி கே. சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.

வெப்பம் அதிகரித்து வரும் இந்த நாட்களில், நீர் அசுத்தமடைவதற்கான வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. கொதிக்கவைத்து ஆறிய நீரையே பருகவேண்டும் என அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாடசாலைக் கல்வியிலே சுகாதாரமும் ஒரு பாடமாக இடம் பெற்றிருக்கின்றது. ஆனால் அதற்குரிய முக்கியத்துவம் உணரப்பட்டிருக்கின்றதா? அழுத்தம் தரப்பட்டிருக்கின்றதா?

பரீட்சைகளை மையமாக வைத்தே பல பாடநூல் தகவல்கள் திணிக்கப்படுகின்றன. அவற்றை ஜீரணித்துத் தமதாக்கிக் கொள்கின்றனரா?

பெற்ற அறிவு தமக்கும், சமூகத்திற்கும் பயன்படுகின்றதா?

சில நோய்கள் பரவும் வேகத்தையும், நமது சுற்றுடலிற் காணப்படும் சில சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் காணும்போது இத்தகைய கேள்விகள் எழுப்ப வேண்டியது அவசியமாகின்றது.

உயர்வகுப்பு மாணுக்கர் மட்டத்திலே சுகாதாரம் பற்றிய கருத்துக்களைப் பரப்ப நோய்த்தடுப்பு பிரிவினர் உதவியைப் பெறவேண்டும்.

கருத்துத் தெளிவு பெற்ற மாணுக்கர் மூலம் கிராமமக்களுக்கு இதனைப் பரப்பலாம்.

சில ஆண்டுகளுக்கு முன் இளைஞர்கள் சிலரின் தீவிர முயற்சியால் கிராமங்களிலே சுகாதாரக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டதை நாம் மறப்பதற்கில்லை.

பாலர்கள் உயிர்பேண வேண்டுமாயின் இத்திட்டமும் உயிர்பெறவேண்டும்.

உடல் நலம் பற்றிய தெளிவான கருத்துக்கள் ஊர்கள் தோறும் பரவவேண்டும்.

அப்போதுதான் பாலர்கள் பலியாவது பெருமளவு குறைவதோடு, உடல் நலம் மிக்க சமுதாயமும் உருவாகுமென்பதை உறுதிபடக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

# தவக்கால நற்சிந்தனை

## "இருளைப்பழிப்பதைவிட ஒளி ஏற்றுவதே மேல்"

இன்று நாம் சிந்தனைக்கும் செயலுக்கும் தொடர்பில்லா வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டு தவக்காலத்தை செலவிடுவோமானால் அவற்றால் நம்மை நாமே ஏமாற்றுகிறோம் என்பதே பொருளாகிவிடும் எமது வாழ்வை அர்த்தம் நிறைந்தவையாக ஆக்க மற்றவர்களில் குறைகாணும் மனிதராக வாழாது மனித உள்ளங்களை ஏளனம் செய்து மனித மனதை ஊனப்படுத்துவதில்காலத்தைச் செலவிடாது குறைகளைய நிறைகளை நாமே செய்யமுன்வரும் ஒளி ஏற்றும் வாழ்வில் இந்நாளை செலவிடுவோம்.

''இருளைப் பழிப்பதை விட ஒளி ஏற்றுவதே மேல்'' இவ் வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்து வாழ எம்மை நாம் தயார் செய்யமுனைவோம். மனித மனங்களைபுரிந்து வாழுதலில் உயர்வு தாழ்வை அகற்றுவதன் மூலம் இறைவன் முன் எல்லோரும் சமம், என்ற நிலையில் எமது அதிகார, ஆணவ அகந்தைகளை களைந்து இறைவனின் மீது நாம் ஏற்றும் சுமைகளைக்களைய எமது பணிகளால் எம்மைத் தூய்மைப் படுத்தும் தவக்காலத்தில் எம் அகக்கண்களைத் திறந்து ஆண்டவனைத்தொழுவோம்.

சகோ. பி. மார்க் இக்னேசியஸ்
C. M.S.F.

## மாணுக்கர் மலர்ச்சிக்காக

# பாடசாலை மாணவர்களிற் காணப்படும் உடல்நலக் குறைபாடுகள்

**இளம் சமுதாயம் வளர்ச்சிபெற வேண்டுமாயின் பல்வேறு துறைகளிலும் கண்காணிப்பும் வழிகாட்டல்களும் அவசியம். அவர்களின் உடல் நலக்குறைவுகள்பற்றி ஆசிரியர்களும், பெற்றோர்களும் அறிந்திருக்கவேண்டியன இங்கு தரப்படுகின்றது.**

பாடசாலை மாணுக்கரிற் பலர் தவிர்க்கக்கூடிய நோய்களுடன் காணப்படுகின்றனர்.

இன்றைய நவீன வாழ்க்கை முறையில் குடும்ப வைத்தியர் முறையும் இல்லை; இருந்தாலும் போதிய நேரவசதியின்மையால் தக்கநேரம் செலவழித்து உடல் நலக் குறைபாடுகளை உரியநேரத்திற் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும்.

இவற்றைத் தக்க சமயத்திற் கண்டுபிடித்து உரியநேரத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்படாவிடில் பிற்காலத்திற் பல பிரச்சனைகள் உருவாகக் கூடும்.

இதனால் உடல் வளர்ச்சி மாத்திரமல்ல, உள வளர்ச்சியும் பாதிப்புறும். போஷாக்குக் குறைவும், உயிர்ச்சத்துக் குறைவும், மனநோயில் முடியும். ஒழுக்கப்பிரச்சனைகளும் மாணுக்கர் கல்வியில் அடைய வேண்டிய முழுப்பலன்களையும் அடையவிடாது தடுக்கும்.

காது மந்தமாகக் கேட்டலும், கண்பார்வைக் குறைவும், பாண்டுநோயும் சில உதாரணங்களாகும்.

### ஆசிரியர்கள் பங்கு

பெற்றோர்களிலும் பார்க்க ஆசிரியர்கள் தான் பிள்ளைகளைக் கூடியநேரம்கண்காணிக்கும் வாய்ப்பு உண்டு. வகுப்பறைகளிலும், விளையாட்டு போன்ற புற ஈடுபாடுகளிலும் அவர்களின் பல்வேறு குறைநிலைகளை அவதானிக்க முடியும். குறைபாடுகளைக் கண்டறியமுடியும்.

எனவே முதலில ஆசிரியர்கள் நோய்கள் பற்றியும், நோய்க்கான காரணங்கள் பற்றியும், பொதுவான கருத்துக்களிற் பரிச்சயம் உள்ளவர்களாக வேண்டும்.

காணப்படும் குறைபாடுகளை அறிந்ததும் பாடசாலை வைத்திய அதிகாரியிடமோ, சுகாதார வைத்திய அதிகாரியிடமோ தகுந்த சிகிச்சை பெற மாணுக்கரை அனுப்பி வைக்கவேண்டியது அவர்கள் கடமையாகும்.

சில குறைபாடுகளைச் சுலபமாகக் கண்டுபிடிப்பதற்கான சில ஆலோசனைகளை மாத்திரம் இங்கு தருகிறோம். இது பூரணமானதல்ல என்பதையும், நவீன கருத்துக்களை அவ்வப்போது திரட்டவேண்டுமென்பதையும் நினைவிற் கொள்ளுதல் நன்று.

### 1. போஷாக்குக் குறைபாடுகள்

மாணுக்கன் தன் வயதை ஒத்த மற்ற மாணுக்கர்களிலும் பார்க்க குட்டையாகவும், மெலிந்தும் காணப்படுவான்; எளிதிற் களைப்படைவான், அடிக்கடி நோய்க்காளாவான்,

போஷாக்குக் குறைபாட்டின் காரணங்கள் பின்வருமாறு:

(அ) வறுமை — புரதச்சத்தும். உயிர்ச் சத்தும் உள்ள உணவு வகைகள் நாளாந்த உணவிற் சேர்க்கப்படாமை.

(ஆ) ஆரோக்கியமற்ற சுற்றுப்புறம்.

(இ) எண்ணிக்கை கூடிய பெரிய குடும்பத்தினாலும், வீட்டு இடவசதி போதாமை.

(ஈ) பெற்றோரின் அறியாமை, கவனக்குறைவு.

(உ) உரிய வேளையில் தகுந்த உணவை உண்ணாமை.

போஷாக்குக் குறைபாட்டினற் சில பிள்ளைகள் அதிகப் பருமனாக (Obesity) காணப்படுவர்; சோம்பேறிகளாக இருப்பர். இவர்களின் எலும்புகளிலும், தோலிலும் குறைபாடுகள் காணப்படலாம். பிற்காலத்தில் நீரிழிவு. இருதய நோய். அதிக இரத்த அமுக்கம், பித்தப்பை நோய்கள் ஏற்படலாம்.

உடற் பருமனுக்குக் காரணங்கள் எவை?

(அ) மாப் பதார்த்தம் அதிகம் உண்பது.

(ஆ) அடிக்கடி உண்பது.

(இ) மனக் குழப்பங்கள்.

ஆசிரியர் கடமை என்ன? நிறை, உயரம், இடது கையின் நடுச் சுற்றளவை அளத்தல்; பதிந்துவைத்தல்.

### 2. அசுத்தம்

மாணுக்கர் சிலர் அசுத்தமா

(5ம் பக்கம் பார்க்க)

## விடிவு எப்போது?

உபதபால் அதிபர்களாகிய நாம் பலவித இன்னல்களுக்கிடையில வேலை செய்கின்றோம். பிணைப்பணமாக 7500/- ரூபா கட்டுகிறோம்,

சேமலாபநிதி மாதாமாதம் கழிக்கப்படுகின்றது எமக்குச் சம்பள உயர்வுகள் இல்லை

ஒய்வூதியம் பெறுவோர் உட்பட பலருக்கும் வழங்கிய ரூபா 200/- சம்பள உயர்வு எமக்குகிடைக்கவில்லை. கடந்த வருடத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு (ஓய்வூதியர் உட்பட) வழங்கப்பட்ட இரண்டு சம்பள உயர்வுகள் எமக்கு கிடைக்கவில்லை. இன்றைய நிலையில் ஒரு நாள் கூலியாள் பெறும் சம்பளம் ரூபா 100- வரை உள்ளது. எமது நிலை மிகவும் பரிதாபகரமானது.

# மக்கள் கருத்து

எமக்கு வழங்கும் மாத சம்பளம், உதவியாளர் சம்பளம் கட்டிட வாடகை, காரியாலய செலவுகள் போக மிகுதியாக இருப்பது ஒரு சிற்றூழியர் எடுக்கும் சம்பளத்தின் அரைவாசியாகத்தான் இருக்கின்றது. அதேபோல் அவசர தேவைகளுக்கு லீவு எடுக்கமுடியாமல் உள்ளது. அப்படி லீவு எடுப்பதானால் நாங்களே ஒருவரை நியமிக்கவேண்டும். அதற்கு ஒரு நாளைக்கு அரசாங்கம் தரும் பணம் 15- அல்லது 20- தான், இப்பணத்திற்கு வேலைசெய்ய யார்முன் வருவார்கள்.

இன்று விவசாயிகளுக்கு ஒய்வூதியம், மீனவர்களுக்கு ஒய்வூதியம் என அரசாங்கம் ஏற்படுத்தி உள்ளது. அரசாங்க நியமனமாகில் ஆறு மாதத்தில் பதவி நிரந்தரமாக்சப்பட்டு. அவர்களுக்கு ஒய்வூதியம் போன்ற பல வசதிகளையும், சலுகைகளையும் அரசாங்கம் செய்கின்றது. ஆனால் ஐம்பது வருடகாலம் பழமை வாய்ந்த எமது பதவியோ நிரந்தரமாக்கப்படவில்லை: பென்சன் வசதியுமில்லை, மற்றைய சலுகைகளும் இல்லை.

தற்போது பதவியிலுள்ள அரசாங்கம் இவ் உபதபாலதிபர்களின் பிரச்சனையை மனிதாபிமானத்துடன் தீர்த்து வைக்குமா? அப்படிச் செய்யாவிடில் எம்மையும் சிற்றூழியராக்கி அவர்களுக்குரிய உரிமைகள், வசதிகள், சலுகையையுமஎமக்கும் ஏற்படுத்தித்தர வேண்டும். இதுதான் எமது அங்கலாய்ப்பு! இதனைத்தீர்த்து வைப்பது உரியவர்களின் கடமை. இல்லாவிடில் ஒரு சாதாரண அரச ஊழியர்களுக்கு உள்ள உரிமைகளும் இல்லாத ஒரு சுதந்திரமற்ற நிலையிலேயே தொடர்ந்தும் எமது சேவைக்காலத்தை கழிக்க வேண்டியிருக்கும். மனிதாபிமானத்துடன் எங்கள் பிரச்சனைகளை தீர்த்து வைக்க உயர் அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட உபதபால் அதிபர்
(மானிப்பாய்)

## தெற்கேபோகும் வெங்காயம்

(காங்கேசன்துறை)

வடபகுதியில் வெங்காய அறுவடை ஆரம்பித்துள்ளதால் ஏராளமான வெங்காயம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

தினமும் 25க்கு மேற்பட்ட லொறிகளில் வெங்காயம் ஏற்றப்பட்டு கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

வடபகுதியில் இம்முறை அதிக அளவில் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டது.

அத்துடன் தற்போது லொறிப் போக்குவரத்தும் தடையின்றி இடம்பெறஆரம்பித்துள்ளது. இதனால் பெருமளவு வெங்காயம் சந்தைப் படுத்துவதற்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உள்ளூரில் வெங்காயத்தின் விலையும வீழ்ச்சியடைந்துள்ளது. (86)

# பலதும் பத்தும்

## அவரின் பண்பாடு!

2-3-90ல், யாழ்ப்பாணத்தில் உளவளத் துணைவர்களாக விசேட பயிற்சி பெற்றவர்களுக்குப் பட்டமளிப்பு விழா நடைபெற்றதல்லவா?

அங்கே ஓர் புதுமை... தமிழர் தம் பண்பாட்டினை நினைவுபடுத்துவதான ஓர் சம்பவம்...

பட்டம் பெற்றவர்களில் ஒருவர் வேட்டி சால்வையுடன் சென்று -அதாவது தமிழர்தேசியஉடையிற் சென்று தனது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இது இவர்செய்த முதற் புதுமையா? இல்லவேயில்லை; சட்டப்படிப்பை முடித்ததும், சட்டத்தரணியாவதற்கு உயர்நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டுமல்லவா? அங்கும் அவர்தேசிய உடையிற் சென்றிருக்கிறார்! அது மாத்திரமா] தமிழிலேயே சத்தியப்பிரமாணமும் எடுத்திருந்தாராம்!

யாரிவர்? என். ஜீவேஸ்வராதான்!

## சிகாமணி தரம் 1

1990 – தேசிய தினம் விஞ்ஞானம். கலாச்சாரம், தொழில்வளம் போன்ற பல்வேறு துறைகளிற் குறிப்பிடத்தக்கசேவை செய்தவர்கள்47பேர் விருதுகள் பெற்றன.ர சிகாமணி ரம் 1 விருதுகள் பெற்றவர்களில் ஒருவர் ரீ.சோமசேகரம், இவர்மேலதிகஅளவையாளர் நாயகமாகப்பணியாற்றி வருகிறார்.

எதற்கு விருது? 989ல் வெளியான இலங்கையின் முதல் தேசிய தேசப்படத்தின் பிரதான பதிப்பாளர். இவர் திறமையின் ஓர் அம்சம்... முழுக்க முழுக்க உள்நாட்டுத் தொழில நுட்பத் திறன்களேபயன்படுத்திஉள்ளார்!

நமக்குப் பெருமைதான்!

வாணி

# புங்குடுதீவின் அவலநிலை: பொதுமக்கள் மகஜர்

(நமது புங்குடுதீவு நிருபர் சந்தியோ அமிர்தராசா)

புங்குடுதீவில் நீண்டகாலமாக நிலவும் பல்வேறு பிரச்சனைகள் குறைபாடுகள் குறித்தும் நீண்டதொருமகஜர் உள்ளூராட்சி பிரதேச சபை உதவி ஆணையாளர் திரு. டிவகலாவிற்கு புங்குடுதீவு மக்கள் சார்பில் நேற்று கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில்சுட்டிக்காட்டப்பட்ட அம்சங்கள் வருமாறு:

புங்குடுதீவுப் பகுதி என்றும் வரட்சியான பிரதேசமாகும். குடிதண்ணீரைப் பெறுவதற்கு மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றார்கள். நன்னீரை பெறுவதற்கு பல மைல்களைக் கடக்க வேண்டியுள்ளது. இது சம்பந்தமாக புனர்வாழ்வு அமைச்சினால் வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலகத்திற்கு இரண்டு டிராக்டர்கள் வழங்கப்பட்டன. இதன் மூலமாக மக்களுக்கு குடிநீர்வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் குடிநீர் பொதுமக்களுக்கு ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. வீதிகளில் நின்று தண்ணீரை கேட்டாலும் இல்லை என்ற பதிலைத்தான் கேட்கமுடியும்.

இங்குள்ள பகுதிகள் 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அனைத்து வட்டாரங்களிலும் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. புங்குடுதீவு உப அலுவலகத்தால் விநியோகிக்கப்பட்டு வரும் நீர் விநியோகம் சகல வட்டாரங்களிலும் விநியோகம் செய்யப்படுவதில்லை.

இப்பகுதிகளில் பொதுமக்களால் கட்டப்பட்டுள்ள தொட்டிகளுக்குமட்டும் எந்த நாளும் தவறாது தண்ணீரை நிரப்பி வருகின்றார்கள். ஒரு கலன் 40 சதத்திற்கு வழங்கப்படும் குடிநீரை 75 சதம் தொடக்கம் 80 சதம்வரை விற்பனை செய்கின்றார்கள்.

## பொது நூலகம்

இப்பகுதியில் மிகப்பெரிய நூல்நிலையமாகப் பொதுநூலகம் விளங்கிவருகின்ற போதிலும் வாசகர்களுக்கு நன்மையளிப்பதாக இல்லை. ஆயிரக்கணக்கான ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் அங்கு நிறையவுள்ளன. ஆனால் வாசகர்களுக்கு வழங்குவதற்குத் தயங்குகின்றார்கள். அங்குள்ள புத்தக அலுமாரிகளெல்லாம் வெறுமையாகக் காணப்படுகின்றன. வாசகர்கள் நூல்களைப் பார்த்துத் தெரிவுசெய்ய முடியாதவாறு அறையினுள்வைத்துப் பத்திரமாக நூல்கள் பூட்டப்பட்டிருக்கின்றன.

புங்குடுதீவுப் பகுதியில் பத்திரிகைகளைக் காண்பது அரிதாகவிருக்கிறது. யாழ் மாவட்டத்தில் பல பத்திரிகைகளிருந்தும் இங்கு அரிதாகவே காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் விடுமுறை நாட்கள் என்றால் அங்கு பத்திரிகைகளைக் காணமுடிவதில்லை. இதனால் வாசகர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றார்கள்.

வேலணை பிரதேசசபை புங்குடுதீவுஅலுவலகத்தினால்நடத்தப்படும் இந்நூல் நிலையம் இவ்வளவு சீரழிந்திருப்பது வருத்தத்திற்குரியதாகும்.

## சூழல் பாதிப்பு

வேலணை பிரதேசசபை புங்குடுதீவு உப அலுவலகத்தில் சுத்திகரிப்பாளராகக் கடமையாற்றும் ஊழியர் தங்கள் அலுவலகப் பகுதிகளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டுமே துப்பரவு செய்துவிட்டுத் திடீரென்று மறைந்துவிடுகின்றார். இதனால் முக்கியமான பகுதிகளில் குப்பை கூளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. மேலும் கடந்த காலங்களில் சுத்திகரிப்பாளராக இருவர் கடமையாற்றிவந்தனர். தற்போது ஒருவர்மட்டும் தனித்துச் சேவைசெய்து வருவதால் இங்குள்ள பகுதிகளனைத்தும் குப்பைகளால் நிறைந்து காணப்படுகிறது. இப்பகுதிக்கு இன்னுமொரு ஊழியர் நியமிக்கப்பட வேண்டும்.

## போக்குவரத்து சேவைகள்

இப்பகுதிகளிலுள்ள பொதுமக்கள் தங்கள் போக்குவரத்துச் சேவைகளை நல்ல முறையில் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

அரச தனியார் போக்குவரத்துச் சேவைகளால் மக்களுக்கு நன்மைகிடைப்பதாக இல்லை. இருபகுதியினரும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு செல்வதினால் வீதிகளில் நிற்பவர்களை ஏற்றிக்கொண்டு செல்லத் தவறுகின்றார்கள்.

இங்குள்ள 15 பாடசாலைகளில் கல்வி கற்பித்து வரும் வெளியூர் ஆசிரியர்கள் இங்கு நேரத்துக்கு வரமுடியாத நிலையில் உள்ளனர் இதனால் மாணவர்களின் கல்வியிலும் பெரும் பாதிப்பேற்பட்டு வருகின்றது.

## வீதிகள் அவலநிலை

கடந்த பல வருடங்களுக்கு மேலாக இப்பகுதிகளிலுள்ள பிரதான வீதிகள் திருத்தியமைக்கப்படாது குண்டும், குழியுமாகக் காட்சியளிக்கின்றன. இதனால் இப்பகுதி மக்கள் தங்கள் போக்குவரத்துச் சேவைகளை மேற்கொள்ளமுடியாத நிலையில் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

புங்குடுதீவு மகாவித்தியாலய வீதி. இறுப்பிட்டி வீதி, தம்பர் கடைச் சந்தி போன்ற வீதிகளே மிகவும் சீர்கேடாகவுள்ளன.

இப்பகுதிகளிலுள்ள ஒரு சில வீதிகள் திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் செப்பனிடப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கசிப்பு உற்பத்தி

புங்குடுதீவுப் பகுதியில்என்றுமில்லாதவாறு கசிப்பு விற்பனை அதிகரித்துவருகிறது. கசிப்புத் தொல்லையால் இப்பகுதி மக்கள் சொல்லொணுத் துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் வீதிகளில்கூட உலாவ முடியாத நிலையும் ஏற்பட்டு வருகிறது. [101]

---

## பாடசாலை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கப் பாடசாலைக்கு வருவதேன்?

(அ) வறுமை

(ஆ) பெற்றோரின் கவனக் குறைவு.

(இ) மனோதத்துவக் குழப்பங்கள்.

விலை உயர்ந்த ஆடைகளை அணியவேண்டுமென்று எந்த ஆசிரியரும் வலியுறுத்தமாட்டார். வறுமை நிலை கோடிட்டுக் காட்டுதல் தவிர்க்கப்பட வேண்டும். கிடைக்கும் ஆடைகளைச் சுத்தமாகப் பேணுதல், இருக்கும் வசதிகளைக் கொண்டே உடலைச் சுத்தமாக வைப்பதற்கான ஆலோசனைகள் அவ்வப்போது வலியுறுத்தப்படலாம்.

### 3. மூளை வளர்ச்சி குன்றுதல் (Mental Retardation)

புத்திநுட்பக் குறைவாற் சில பிள்ளைகள் சாதாரண, எளிய கருத்துக்களையே விளங்கிக் கொள்ளக் கஷ்டப்படும். இப்பிள்ளை மேலும் படிப்பைத் தொடரமுடியுமா? குறைபாடென்ன? என்பவற்றை அறியப் பரிசோதனைக்கு அனுப்பப்படவேண்டும்.

### 4. ஒழுக்கப் பிரச்சனைகள்

சாதாரண பிள்ளைகள் பாடங்களிற் கவனமெடுப்பதுடன் மகிழ்ச்சியோடும் காணப்படுவார்கள். ஆசிரியருக்கோ, ஏனைய மாணுக்கருக்கோ பிரச்சனைகளை உண்டாக்கமாட்டார்கள்.

ஆனுல், அசாதாரண நடத்தையுள்ளவர்களை ஆசிரியர்கள் கவனித்து, தொடர்ச்சியான சம்பவங்களிருந்தால் வைத்தியரிடம் அனுப்பவேண்டும்.

வழக்கமான ஒழுக்கப் பிரச்சனைகள் என்ன?

(அ) புத்தி கூறிக் கண்டித்தும் கேளாது ஒழுங்கு விதிகளை மீறி நடத்தல்.

(ஆ) அடிக்கடி வகுப்பைக் குழப்புதல்.

(இ) அடிக்கடி பொய் பேசுதல்.

(ஈ) களவெடுத்தல்.

(உ) சண்டைபிடித்தல்.

அடிக்கடி அழுதல், வெட்கமாக இருத்தல், பொறாமைப்படுதல், உணர்ச்சிவசப்படுதல், தனிமையில் இருத்தல் போன்றவை மனக்குழப்பங்களுக்கு உதாரணமாகும்.

(தொடரும்)

தொகுப்பு:

-சிவா-

---

## சிறுகைத்தொழில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட சிறுகைத் தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. என். கனகசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

புதிய நடைமுறைப்படி முன்னர் விண்ணப்பித்த சிறுகைத் தொழிலாளர்களும் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல அரசாங்கதச்சுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளையும் மீண்டும் இயங்கவைக்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யும் தளபாடங்கள் அனைத்தும் யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க திணைக்களங்களுக்கு விநியோகம் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (12)

---

## புலமைப்பரீட்சையில் சித்திபெற்றனர்

(புங்குடுதீவு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் புங்குடுதீவு சிறி சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்தில் த. தவரூபனும், புங்குடுதீவு மேற்கு அமெரிகக மிஷன் வித்தியாலயத்தில் சி. மதிவதனனும், புங்குடுதீவு கணேசா மகாவித்தியாலயத்தில் க. செந்தீபன், எம். லோஜி ஆகியோரும் சித்தி பெற்றனர். (101)

---

## அதிகாரிகள் நேரில் விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேசிய புனர்வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் ஆலோசர் திரு. எஸ். சிவானந்தமும், ஐக்கிய அமெரிக்க உதவிகள் நிதிப்பிரதிநிதி செல்வி பாலசூரியாவும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல இடங்களுக்கு நேரில் சென்று வீடுகளைத் திருத்தி அமைப்பதின் முன்னேற்றம் குறித்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

பருத்தித்துறை, கரவெட்டி, கோப்பாய், தெல்லிப்பளை, யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை போன்றபகுதி மக்களோடு, வீடு திருத்துவது சம்பந்தமாகக் கலந்துரையாடியதோடு, அதற்கேற்ற நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். (152)

---

## பிரிட்டனுக்கான புதிய தூதர்

(கொழும்பு)

பிரிட்டனுக்கான இலங்கை தூதராக ஜெனரல் சேபால ஆட்டிகல இவ்வாரம் பதவியேற்பார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஜெனரல் சிறில் ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். (சி)

---

ஒட்டுசுட்டானில்

## வி. பு. ம. மு. உறுப்பினர் படிவம் விநியோகம்!

(ஒட்டுசுட்டான்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஒட்டுசுட்டான் வட்டார அலுவலகத்தில் உறுப்புரிமைப்படிவம் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுவருகிறது. உறுப்புரிமைப் படிவத்தில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கொள்கைகளையும், அமைப்பு விதிகளையும் முடிவுகளையும் முழுமையாக ஏற்று, அமைப்பின் தலைமைக்கும் அமைப்புக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்'' என்று உறுப்புரிமை பெறுபவர் பிரகடனப்படுத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## "பாடசாலை வளர்ச்சிக்கு கூட்டுமுயற்சி தேவை"

(யாழ்ப்பாணம்)

''பாடசாலையின் வளர்ச்சிக்கு பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு கூட்டு முயற்சி இன்றியமையாதது. இன்று பெருந்திரளாக பெற்றோர் வருகை தந்தமை மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்'' என்று யாழ். வைத்தீஸ்வர அதிபரும்' வண். தென்கொத்தணி அதிபருமான திரு எஸ். சிவசரவணபவன் குறிப்பிட்டார்.

வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் நடைபெற்ற யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில்; வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்களைப் பெற்றுக் கொடுப்பதென்றும் யாழ் கோட்டை மைதானத்தில், வைத்தீஸ் வராவுக்குச் சொந்தமான மைதானத்தை மீளப்பெற்று விளையாட்டரங்காக மாற்றி அமைக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாக தலைவர் எஸ். சிவசரவணபவன், செயலாளராக எஸ். இராஜதுரை, துணைச் செயலாளராக எஸ் ஜீவரட்னம், பொருளாளராக வி. என் சிவஞானம் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பெருந்தொகையான பெற்றோர்கள் சமூகமளித்திருந்த போதும், அநேகமான ஆசிரிய ஆசிரியைகள் கலந்து கொள்ளாததையிட்டு பெற்றோர் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

---

## "போட்டிக்காலங்களில் மட்டும் பயிற்சி மேற்கொள்ளக் கூடாது"

(மட்டுவில்)

''ஏட்டுக்கல்வியும் உடற்கல்வியும் மாணவசமுதாயத்தின் இரு கண்கள். இந்த இரு துறைக்கல்வியையும் பேணி வளர்ப்பதன் மூலமே அறிவு, ஆற்றல் பண்புகளில் முழுமை மிக்க ஒரு சிறந்த சமுதாயமாக விளங்கமுடியும்''.

இவ்வாறு யாழ் கோட்டக் கல்வியதிகாரி திரு எஸ் வி மகேஸ்வரவேல் மட்டுவில் மகாவித்தியாலய செயல் திறன் போட்டிகளில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

மட்டுவில் கொத்தணி அதிபர் திரு. கே. பேரம்பலம் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. திரு. மகேஸ்வரவேல் தொடர்ந்து பேசுகையில், மாணவர்கள் போட்டிக் காலங்களில் மட்டும் பயிற்சியை மேற்கொள்வதைவிட்டு தினசரி படிப்பு, உடற்பயிற்சியை மேற்கொள்ளும் வழக்கம் ஏற்படவேண்டும்'' என்றார். (82)

---

தச்சுத்தொழில் பாடசாலையில் பயிற்சி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் தச்சுத்தொழில்பாடசாலைகளில் புதிய பயிற்சியாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை யாழ். மாவட்ட சிறுகைத்தொழில் திணைக்களம் கோரியுள்ளது.

இப்பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளபடுபவர்கள் பதினுலு வயதுக்கும் இருபத்திரெண்டு வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும். குறைந்தது எட்டாம்தரம் கல்வி அவசியமானதாகும்.

விண்ணப்பங்கள் இம்மாதம் இருபத்திரெண்டாம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்களை யாழ்ப்பாண செயலகத்திலுள்ள சிறுகைத் தொழில் திணைக்களத்தில் நேரில் சமர்ப்பிக்கலாம். (12)

---

## இன்று பண்ணிசைகச்சேரி

(யாழ்ப்பாணம்]

அளவெட்டிவடக்குதவளகிரி முத்துமாரிஅம்மன் ஆலயத்தில் இன்றுமாலை செல்வி சிவஞானசுந்தரம் சிவகௌரி, செல்வி செல்வராசா கவிதா ஆகியோரின் பண்ணிசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. இவ் ஆலயத்தின் மண்டலாபிஷேக உற்சவத்தில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (12)

### "தையல், பன்னவேலைக்குப் பதிலாக
# பெண்களுக்கு எலக்ட்ரோனிக்,
## அச்சுவேலை பயிற்சி வழங்கலாம்!

### வேலை வாய்ப்புப் பெற இவை உதவும்

(யாழ்ப்பாணம்)

''இலங்கையில் கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களில் பெண்களின் பங்கு கணிசமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சுயாதீன பெண்கள் அமைப்புக்கள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மட்டுமல்ல, அரசியல் பிரச்சினைகளிலும் கூடிய பங்களிப்பைச் செய்திருக்கின்றனர்.''

இவ்வாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பெண்கள் சங்கமும், பெண்கள் ஆய்வு வட்டமும் இணைந்து நடாத்திய 'பெண்களும் அபிவிருத்தியும் ஒரு மீள் பார்வை' என்ற தலைப்பிலான கருத்தரங்கில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு தெரிவித்தார்.

இக்கருத்தரங்கு சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. செல்வி செல்வராதா அப்புலிங்கம் தலைமை நடந்த இக்கருத்தரங்கில் திருமதி சித்திரலேகா மௌனகுரு ''பெண்களிடையே மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தியும் அதற்கான பங்களிப்பும்'. என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

எண்பத்தோராம் ஆண்டு பெண்களில் உழைப்பவர்களின் எண்ணிக்கை பதினேழு சத விகிதமாகவே இருந்தது. இன்று இது ஐம்பத்தொரு சத விகிதமாக மாறியுள்ளது.

#### நகரத்தை நோக்கி

கிராமத்திலிருந்து பெண்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்காக நகரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தாலும், வர்க்கம், சமத்தவம், பால், அபிவிருத்தித்திட்டங்களில் சமத்துவமின்மை போன்ற பல பிரச்சினைகளில் போராட்டம் நடாத்தவேண்யுள்ளது.

இன்றைக்கு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுய வேலைத் திட்டங்களுக்கு பயிற்சி வழங்கும்போதுகூட, ஏதோ, சில துறைகளில் பயிற்சியளிக்கப்படுகின்றது. இப்பயிற்சிகளில் அவர்களினுல் உற்பத்திசெய்யப்படும் பொருட்கள்கூட சந்தை வாய்ப்பின்றி கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். பெண்களுக்கு தையல், பன்னவேலை என்று பழமையான பயிற்சியை வழங்காமல் முன்னேடியாக எலெக்ரேனிக் சாதனம் திருத்துதல், அச்சுவேலை, நவீன புடவைக் கைத்தொழில், கைப்பணிப் பொருள் உற்பத்தி ஆகிய துறைகளில் பயிற்சி வழங்குவதன்மூலம் புதிய வழிகளில் அவர்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இன்றைக்கு அபிவிருத்தித்திட்டங்களில் ஆண்களின் ஆதிக்கமே அதிகரித்துக்காணப்படுகிறது.

#### திறமையாக இருந்தாலும்

பெண்கள் எவ்வளவு திறமையானவர்களாக இருந்தாலும், ஆண்களால் வாய்ப்புக்கள் இல்லாமல் செய்யப்படுகின்றன. இதற்கான காரணம் பெண்கள்குடும்பப்பொறுப்புக்களையும் ஏற்றிருப்பதால், முழுமையாக செயற்படமுடியாதுள்ளதாகக் கூறுகின்றனர். எனவேதான் அபிவிருத்திக்குத் திட்டமிடும்போது, பெண்களுக்கு ஒய்வை அதிகரிக்கச் செய்வார்களானுல், பெண்களையும் இணைத்து சமர்தர்ம சமுதாயத்தைக்கட்டியெழுப்ப முடியும்'' என்ருர்.

#### விவசாயத்தில் அதிக ஈடுபாடு

ஐக்கிய நாடுகள் சிறுவர் நல நிதியத்தின் வடபிரதேச அமைப்பாளர் திருமதி சர்வமங்களம் கைலாசபதி 'பெண்களின் விவசாய அபிவிருத்தி' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்றைக்கு உலக நாடுகளில் விவசாய முயற்சிகளில் பெண்களே அதிக எண்ணிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் கூட அதிக உழைப்பையும், குறைந்த வேதனத்தையும் பெறுபவர்கள் பெண்கள். ஆண்களின் நாளாந்த வருமானம் அறுபத்தைந்தாக இருக்கும்போது பெண்களது வருமானம் முப்பத்தைந்தாகவேயுள்ளது.

கடந்த காலங்களில், விவசாய அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடும் நிபுணர்களும், திட்டவியலாளர்களும் பெண்களது பிரச்சினையை அணுகி, திட்டங்களை உருவாக்கவில்லை. இதனுல் இன்றும் பெண்களது நிலைமை குறித்து பெண்களே போராட வேண்டியுள்ளது. இன்றைக்கு எழுபத்தேழு சத விகிதமானவர்களுக்கு சொந்த நிலம் இல்லை. பெண்களில் ஒரு சத விகிதமானவர்களுக்குக்கூட அவர்களது பெயரிலோ காணிகள் இல்லை. ஆனல் பெண்கள் கூடிய உழைப்பாலும், செலவில் வருமானம் இல்லாமலும் அவல நிலையில் வாழ்கின்றனர் என்றார்.

திருமதி சரோஜா சிவச்சந்திரன "மூன்றும் உலக நாடுகளில் மக்கள் தொகை கட்டுப்படுத்தல்'' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது:

''இன்றைக்கு மூன்ரும்உலக நாடுகளில் சனத்தொகை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும் வளர்முக நாடுகளில் அதிகரிப்புக்காணப்படுகிறது. பொருளாதார நிபுணர்கள் குழந்தை பிறப்பதைப் பெரிய பிரச்சனையாகக் கருதுகிருர்கள். இது பொருத்தமானதல்ல. பொருளாதார நிபுணர்கள் மக்கள் தொகை அதிகரிப்பதால் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு தொழில்வாய்ப்பு தேடிவந்துவிடுவார்கள் என்ற அச்சமே அவர்களை இப்படி செய்யத்தூண்டுகிறது. குடும்பகட்டுப்பாட்டு திட்டங்கள் ஆண், பெண் சமமாகவே உருவாக்கப்பட்டது. ஆனுல் அதனை ஆண்கள் பெண்களுக்காகத்தான் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டமென பலவகையிலும் திணிக்க முற்பட்டுவருகின்றனர். கருத்தடைமுறைகள் கூட ஆண்களுக்குமுண்டு ஆனுல் பெண்கள் தமது வறுமையைப்போக்க கருத்தடை செய்து ஐநூறு ரூபாயைப் பெறும் நிலையுள்ளது. ஆரம்ப வாழ்க்கையின் அடித்தளம் சந்தோஷமாக இருக்கவேண்டுமானுல் ஆணுக்கும்பெண்ணுக்கும் சமபங்குண்டு. இதற்கு ஆண்கள் பெண்கள் மீது சில அழுத்தங்களைப் பிரயோகிப்பது தவிர்க்கப்படவேண்டும் என்ருர்.

கலைப்பீடாதிபதி என். பாலகிருஷ்ணன் கைத்தொழில் அபிவிருத்தியில் பெண்கள் பங்களிப்பு'' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது கைத்தொழில் துறைகளில் பெண்கள் பங்களிப்பு அதிகரித்துவருவதால், கிராமப்புற பெண்கள் நகர்ப்புறங்களை நோக்கி நகர்ந்துவருகின்றனர். கடந்தகாலங்களிலும்பலகைத் தொழில் நிறுவனங்களிலும் பெண்கள் முன்னேற்றம் குறைவாகக்காணப்பட்டது. இன்று பெண்கள் தமக்கென சுயாதீன அமைப்புக்களை ஏற்படுத்தி தமது நலன்களுக்காக அறைகூவல் விடுப்பதால் நிலைமை மாறிவருகின்றது. பல்தேசிய நிறுவனங்கள் இன்றைக்கு பெண்களின் நலன்களை குறைத்துவருகின்றன. அவர்களது உழைப்பை சுரண்டிவருகின்றன. இந்நிலைமை இலங்கை தாராளபொருளாதாரக் கொள்கையால் உருவானது எனலாம் என்ருர். (12)

## இராசி பலன்

செவ்வாய்க்கிழமை
13 - 03 - 1990

மேடம்: அறிஞர் சந்திப்பு, குடும்பமகிழ்ச்சி வீட்டில் சுப காரியம், தொழில்லாபம் உறவு

இடபம்: எதிர்பாராத கவலைக்குறைவு தாய்வழி நினைவு, தொழில் பாதிப்பு, கவலை.

மிதுனம்: கடிதத்தொல்லை, வேலைப்பளு பொருளாதார கவலை, தொழில் பிரச்சினை குடும்பப்பிரிவு.

கடகம்: மனமகிழ்ச்சி தொழில் மாற்றம் காரியபலிதம், சகோதரஉதவி, பாராட்டு

சிங்கம்: பழிச்சொல்கேட்டல், வாக்குவாதம் மனக்கவலை தாய்வழி உதவி. குடும்பமனஸ்தாபம்.

கன்னி: அதிகாரிகள்ஆதரவு பணவரவு குடும்பமகிழ்ச்சி தொழில்லாபம், சிறப்பு.

துலாம்: குடும்பசந்தேகம், பயணங்களால்செலவுதொழில் துறை சிக்கல், நண்பர்பகை.

விருச்சிகம்: எதிர்பாராத உதவி, தொழில் முதலீடு, மனைவியால் பாராட்டு, விருந்து

தனுசு: தொழில்லாபம், புதிய உறவு அரசியல் பிரவேசம், கடன்வசூல் பாராட்டு

மகரம்: அதிர்ஷ்டக் குறைவு சொத்துதகராறு, குழப்பம் நெஞ்சம்அதிகாரிகள் தொல்லை மனச்சுமை.

கும்பம்: ஏமாற்றம் நோய் வாட்டும், வீட்டில் துன்பம், மக்களால் செலவு.

மீனம்: தொழில் முறைப் பிரச்சினை, பண்பாடு தவறுதல் பணவரவு குடும்ப உல்லாசம் ஆலய தரிசனம்.

## புதிய ரயில் நிலைய அதிபர்

(மன்னுர்)

பேசாலை புகையிரத நிலைய பிரதம அதிபராக திரு. ஏ. மரியதாஸ் கடமை ஏற்றுள்ளார். இங்கு ஏற்கனவே கடமையாற்றிய பிரதம நிலைய அதிபர், தலைமன்னுர் கப்பல்துறை புகையிரத நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## குடிநீர் கஷ்டம் நீங்கியது

(மன்னுர்)

மன்னுர் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் பயிலும் மாணவர்களின் நலன்கருதி மன்னுர் சிறுவர் பாராமரிப்பு நிலையம் பல ஆயிரம் ரூபாய் செலவில் ஓர் தண்ணீர்தாங்கி நிலையத்தை நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. இதனுல் மாணவர்கள் நீண்ட நாட்களாக அனுபவித்த தண்ணீர் கஷ்டம் நீங்கியது. (85)

## இப்படியும் நடக்கிறது

"தவறுக்கு வருந்துங்கள், இனித்தவருது திருந்துங்கள்; கவலையைத் தள்ளுங்கள், வரும் காலத்தைவெல்லுங்கள்; இதமாகப்பேசுங்கள், மக்கள் இதயத்தில் வாழுங்கள்............''

இதென்ன கவிதை என்றுதானே கேட்கின்றீர்கள்?

இலங்கையிலுள்ள இந்திய அமைதிகாக்கும் படையினருக்காக சென்னை, திருச்சி வானெலி நிலையங்களில் ஒலிபரப்பப்படும் 'அன்புவழி', 'வெற்றிமாலை' நிகழ்ச்சிகளில் இரு தினங்களுக்கு முன்னர் 'வெற்றி மாலை'யில் ஒலிபரப்பப்பட்ட பாட்டுத்தான் மேலே கவிதைவடிவில் நீங்கள் படித்தது.

கவிதையை மீண்டும் ஒருதடவைபடித்துப்பாருங்கள். இப்பாடல் யாருக்காகப் பாடப்பட்டது? இதன் அர்த்தம் தான் என்ன?

ஆபிஸ்பையன் கேட்கின்ருன்: அமைதிகாக்கவந்த படைதான் படிப்படியாக நகர்ந்து விட்டதே. அங்குமிங்குமாக திருகோணமலையிலும் காங்கேசன்துறையிலும் தங்கியிருக்கும் படையினருக்காக இன்னுமா இந்த நிகழ்ச்சி

சும்மா சொல்லக்கூடாது சூடான கேள்விதான்!

''ஊடுருவி''

### வடமராட்சி கிழக்கு
## ஆசிரியர் பற்றுக்குறை நீக்க
# நடவடிக்கை

(மருதங்கேணி)

''வடமராட்சிகிழக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் தளபாடப் பற்றுக்குறையினை நீக்குவதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று வடமராட்சி உதவிக் கல்விப்பணிப் பணிப்பாளர் திரு. பி. வீரபத்திரன் ஆழியவளை சி.சி த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினுர்.

பாடசாலை அதிபர் திரு. து. இராசரத்தினம் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது.

இவ் வைபவத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீரபத்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில், ''வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியப் பற்றுக்குறையினை நீக்குவதற்குப் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது'' என்ருர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கல்வி அதிகாரி திரு. கே. வி. இராசலிங்கம் உரையாற்றுகையில், ''பாடசாலைகள் தோறும் வசதியான விளையாட்டு மைதானங்கள் அவசியமானதாகும். மாணவர்கள் கல்வியோடு, ஏனைய பாடசாலை நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ள வேண்டும்'' என்ருர். (53)

### முல்லைத்தீவு
## அரச அதிபருக்கு பாராட்டு

(மாங்குளம்)

''முல்லைத்தீவு அரசாங்கஅதிபர் தனது மக்களுக்காகவும், இப் பின்தங்கிய தொகுதிக்காகவும், சிறந்த சேவையாற்றுவதையிட்டு நான் பெருமிதமடைகிறேன். இவர் இம் மாவட்டத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவர். பொறியியலாளர் முத்துக்குமாரசூரியரும் இப்பகுதி வீதித்திருத்தத்தில் கண்ணேட்டமுள்ளவர்''.

இவ்வாறு மாங்குளம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் தலைமையில நடைபெற்ற உயர்அதிகாரிகள் மட்டத்திலானகலந்துரையாடல் கூட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் திரு. எம். பி. எஸ். பெர்ணண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்; ''இப்பகுதிக்கு நான் 8வருடங்களின் பின்னர் வந்துள்ளேன். தொடர்ந்தும் இப்பகுதிக்கு வரவுள்ளேன். அரசாங்கத்தின் கடமைகளை நாங்கள் கூடிய வரையில் செயல்படுத்தவேண்டும். வீதிகள்திருத்தத்திற்காக பெருந்தொகையான பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்ட சீரற்ற நிலையில் குறைந்த அளவு பணமே செலவிட முடிந்தது. முல்லைத்தீவு பின்தங்கிய மாவட்டம். இம் மாவட்டத்தின் வளர்ச்சியில் நான் அதிக அக்கறை கொள்வேன். இந்த மாவட்டத்தின் வீதிகள் அபிவிருத்திக்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் புரிந்துணர்வும் கலந்துரையாடலும் அவசியம்'' என்ருர்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில்துணுக்காய்உதவிஅரச அதிபர் திரு. ஆர். கிருஷ்ண பிள்ளை, புதுக்குடியிருப்பு உ. அ. அதிபர் திரு அ. இராசரத்தினம், முல்லைத்தீவு உதவி அ. அதிபர் திரு. வி. கந்தசாமி மக்கள் பிரதிநிதி சண்முகம் ஆகியோரும் உரையாற்றினர், வடமாகாண பணிப்பாளர் திரு. எஸ். பாலேந்திரா மற்றும் பிரதான பொறியியலாளர்கள். ஒப்பந்தகாரர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (450)

## வள்ளுவர் முதலிடம்

(மருதங்கேணி)

ஆழியவளை சீ. சீ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதலாமிடத்தை வள்ளுவர் இல்லமும், இரண்டாமிடத்தை பாரதி இல்லமும், மூன்ருமிடத்தை கம்பர் இல்லமும் பெற்றன.

## ஆலய உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகராலயத்தில் பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட புதிய அழகிய சித்திரத்தேரில் ஆலய வருடாந்த ரதோற்சவத்தன்று விநாயகப் பெருமான் வீதிவலம் வந்தார். தேரின்பின்னுல் ஆண்கள் அங்கப்பிரதட்சணையும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தனர். சிறுவர், சிறுமியரும் பஜனை, கூட்டுப்பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். சனிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த உற்சவம் முடிவடைந்தது. (54)

# இலங்கை விமானப்படை விரைவில் பலப்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கை விமானப் படை பாரிய மாற்றங்களை விரைவில் மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கமைய, புதிய விமானங்கள் ஹெலிகொப்டர்களையும் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இலங்கை விமானப் படை வசம் குறைந்தளவு விமானங்களும், ஹெலிகாப்டர்களும் ஏனையரக சிறு விமானங்களுமே உள்ளதாகவும், நவீன அமைப்பிற்கேற்ப இவை புதிதாகக் கொள்வனவு செய்யப்படவேண்டும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்காலத்தில் நாட்டுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் அதனைச் சமாளிக்கும் விதத்தில் இப்படை அமையவேண்டுமென்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் விரும்புகின்றன.

இதற்மமையச் சில திட்டங்கள் உள்ளதாகவும் அவை பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் அவ்வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

விமானப் படையைப் பலப்படுத்தப்படுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## "பாடசாலைக் கல்வி இன்று திசை திரும்புகிறது"

(வட்டுக்கோட்டை)

''பாடசாலைக் கல்வியானது இன்று திசை திரும்பிச் செல்கின்றது. பாடசாலைக் கல்வி எப்படி இருக்கவேண்டுமென்று கல்வியமைச்சு எதிர்பார்க்கின்றதோ அப்படி இல்லாது அது வேறுவிதமாக நடைபெறுகின்றது மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று அங்கு படித்தவற்றை வீட்டிலிருந்து மீட்டுக்கொள்ள நேரமில்லாது பெரும் கஷ்டப்படுகிறார்கள். இதற்குக் காரணமென்ன? பாடசாலைக்குச் செல்லும் மாணவர் பாடசாலை விட்டதும் 'ரியூஷ'னுக்குச் செல்கின்றார்கள். 'ரியூஷ'னிலிருந்து வீட்டுக்கு வந்ததும் நித்திரை கொள்கிறார்கள். வீட்டில் சிறிதுநேரமாவது ஓய்வெடுக்க நேரமில்லை. விளையாடுவதில்லை. இதனால் மாணவர்கள் ஆரோக்கியமற்றவர்களாக-சுறுசுறுப்பு இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள் சகல மாணவர்களும் விளையாட்டில் ஈடுபடவேண்டும் பாடசாலையில் படித்தவற்றை வீட்டில் மீட்டுக்கொள்ள வேண்டும்.''

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அதிபர் திரு.சி. டாஸ் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. திரு சிவானந்தன் மேலும் கூறுகையில்; ''இங்கு இடம்பெற்ற உடற்பயிற்சி நிகழ்ச்சியானது என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. புதிய பாணியில் இசையோடு நடத்தப்பெற்ற இந்த நிகழ்ச்சிக்கு எனது பாராட்டுக்கள். ஏனைய பாடசாலைகளும் இதைப் பின்பற்றி விளையாட்டு, கலை, கலாசாரத்தை வளர்க்க முன்வர வேண்டும்'' என்றார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு து.வைத்திலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில், ''இப்பாடசாலை ஒரு கொத்தணிப் பாடசாலையாக-மூலாதாரப் பாடசாலையாக இருந்தும் போதிய வளமுள்ளதாகக் காணப்படவில்லை. இங்கு எத்தனையோ தேவைகள் நிறைவேற்றப்படாதிருக்கின்றன. இத்தேவைகளில் ஒரு சிலவற்றையாவது நிறைவேற்றுவதற்காகப் பலமுறை சிபார்சுசெய்திருக்கிறேன். நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. இவ்வாண்டு இக்கல்லூரிக்கு முதலிடம் கொடுத்து நிதி ஒதுக்கீட்டுக்குச் சிபார்சு செய்துள்ளேன். கோட்டக் கல்வி அதிகாரிஅவர்களும் இக்கல்லூரியின் நிலையை உணர்ந்து நிதி ஒதுக்கீடுசெய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்'' என்றார்.

வட்டுக்கோட்டை கொத்தணியின் முன்னுள் அதிபர் திரு. நா. வேலுப்பிள்ளையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் 334½ புள்ளிகளைப் பெற்ற சோமசுந்தரப் புலவர் இல்லம் (மஞ்சள்) முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. முதலியார் குமாரசுவாமி இல்லம்(பச்சை) 270½ புள்ளிகளையும், சபாரத்தினசிங்கி இல்லம் (சிவப்பு) 215½ புள்ளிகளையும், அம்பலவாண நாவலர் இல்லம் (நீலம்) 211½ புள்ளிகளையும் பெற்று முறையே இரண்டாம், மூன்றும், நான்காம் இடங்களைத் தட்டிக்கொண்டன. (139)

## மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள பாடசாலைகளுக் கிடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகிறது.

அண்மையில் நடைபெற்ற செம்மலை, குமுளமுனை, அளம்பில் பாடசாலைகளுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களில் விடுதலைப்புலிகளின் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

(144)

## களியாட்ட விழாவாக காட்சிதந்த விளையாட்டு விழா

### கல்வி அதிகாரி கண்டனம்

(வட்டுக்கோட்டை)

''இன்றைய விளையாட்டு விழா ஒரு களியாட்டு விழாவாகவே காட்சியளிக்கின்றது. விளையாட்டு விழாக்கள் களியாட்டு விழாவாக இருக்கக் கூடாது. ஆசிரியர்கள் இதில் அதிக கவனமெடுத்து ஒழுங்கான முறையில் விளையாட்டுப் போட்டிகளை நடாத்தவேண்டும். மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளில் தவறாது கலந்து கொள்ளவேண்டும். இப்பாடசாலை விளையாட்டுப் போட்டிக்கு இங்குள்ள பெற்றோர், பொதுமக்கள் காட்டுகின்ற ஆதரவு பாராட்டுக்குரியது.''

இவ்வாறு வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய விளையாட்டுத்துறைக் கல்வி அதிகாரி திரு. கே. நாகமணி கூறினார்.

வித்தியாசாலை அதிபர் திரு திரு. சிவ. வாகீசர் தலைமையில் இப்போட்டி நடைபெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்க முன்னாள் செயலர் திரு எஸ். தங்கராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

போட்டியில் பரிசு பெற்றோருக்கான பரிசில்களை விளையாட்டுத்துறைக் கல்வி அதிகாரி திரு. கே. நாகமணியும், வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு நா. க, தங்கரத்தினமும் வழங்கினர். (139)

## வரலாற்றுத்துறை கழகம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத்துறைக் கழகம் அண்மையில் புனரமைக்கப்பட்டு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு;

போஷகர்; பேராசிரியர் திரு. எஸ். பத்மநாதன், பெரும்பொருளாளர்:- திரு. எஸ். கிருஷ்ணராஜா, மன்றத் தலைவர்:- செல்வன் கே. சிவகணேசன், மன்றச் செயலர்:- திருமதி பி. மல்லிகா. மன்றப் பொருளாளர்;- செல்வி எம். எப். பருஞஸ், உப தலைவர்:. செல்வி ஈ. சரோஜினிதேவி, உப செயலர்:- செல்வன் எஸ். எம். சபிக், பத்திராதிபர்:- செல்வன் எஸ். யேசுநேசன்'

செயற் குழு உறுப்பினர்களாக மேலும் ஐவர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் பெயர்கள் வருமாறு: செல்வன் ரி. அருணகிரிநாதன், செல்வி எஸ். மஞேகரி. செல்வி ஐ. மேரி திரேசா. செல்வி கே. ரஜனி, செல்வி எஸ். பத்மாவதி. (12)

## சண்டிலிப்பாய் நிவாரண கொடுப்பனவுகள்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பிரிவில் மீளக்குடியமர்தலுக்கான ரூபாய் ஆயிரம், உற்பத்திததிறன் முயற்சிக்கான ரூபா நாலாயிரம் ஆகியனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க.சிவசம்பு தெரிவித்துள்ளார். (71)

## உடற்பயிற்சிப் போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் கொத்தணிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் கல்லூரி 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 1 வது, 3-வது இடங்களையும் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 3-வது இடத்தையும் பெற்றுக்கொண்டது. (71)

## கூட்டுறவு கடனுதவி சங்கத்துக்கு பாராட்டு

(பண்டத்தரிப்பு)

''கிராம மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குக் கூட்டுறவு இயக்கம் சிறந்த சாதனமாக விளங்குகின்றது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குக் கூட்டுறவு அடிப்படையிலான திட்டங்களும் செயற்பாடுகளும் நல்ல முறையில் பயன்படுத்தப்படவேண்டும். கடந்த ஏழு வருடகாலமாக இக்கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம் இப்பகுதி மக்களுக்குச் சிறந்த சேவைகளை ஆற்றிவருவதை பாராட்டாமல் இருக்கமுடியாது.''

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வங்கி அலுவலக திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு வங்கியைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. செபமாலைத்திறம் அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

சங்கத் தலைவி திருமதி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அருட்திரு செபமாலைததிறம் அடிகளார் தொடர்ந்து உரையாற்றுகையில்; இச்சங்கம் தமது உறுப்பினர்களுக்கு சுயமுயற்சிக்கடன்களையும் மற்றும் பல்வேறு கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பாடுபட்டுவருவது குறித்தும் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும், புதிதாக வங்கி அலுவலகம் ஒன்றை இச்சங்கம் நிறுவியுள்ளமை அதன் பணிகளை மேலும் சிறந்தமுறையில் செயறபடுத்த உதவும் என்றும் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவி திருமதி ஜெயமணி ஜோசப் தமது தலைமை உரையில்; ''கடந்த 1983-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்று வளர்ச்சி அடைந்திருப்பதற்கு உறுப்பினர்களின் ஐக்கியமும், நாணயமுமே முக்கிய காரணங்களாகும்'' என்றார்.

சங்கத்தில் மாணவர்களுக்கான சேமிப்புப் பிரிவில் கூடுதலான பணத்தை சேமித்திருக்கும் முதல் மூன்று மாணவர்களுக்கு பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் பரிசில்களை வழங்கினர். (72)

## பாண்டியன் இல்லம் முதலிடம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் மேற்கு நுணசை வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி வித்தியலய அதிபர் திரு வே. சேஞதிராசா தலைமையில் நடைபெற்றபோது பாண்டியன் இல்லம் அதிகப்புள்ளிகளைபெற்று முதலாமிடத்தை பெற்றது. சோழன் இல்லம் இரண்டாமிடத்தையும், சேரன் இல்லம் மூன்றுமிடத்தையும் பெற்றன. (72)

## வடமராட்சி கிளைக் கட்டடம்

(புலோலி)

இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்கத்தின் வடமராட்சிக் கிளைக்கென 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் அலுவலகக் கட்டிடடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

இக்கட்டிடம் கட்டுவற்கான நிதியை போரூட் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியன வழங்கி யுள்ளன.(61)

## பாடசாலை ஸ்தாபகர் தினவிழா

(மானிப்பாய்)

மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலையின் ஸ்தாபகர் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி ஆர். இருதயநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக மருதஞமடம் உதவிக்கல்விப் பணிப்பளர் திரு. ஆர்' கே. குலசேகரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

அன்றைய தினம் பேச்சுப் போட்டிகளும், பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதுடன் அண்மையில் அப்பாடசாலையில் நடந்து முடிந்த மெய்வல்லுநர் போட்டியில் வெற்யீட்டிய மாணவிகளுக்கு பரிசில்களும்வழங்கப்படவுள்ளன. (71)

## இடமாற்றம்

(ஆனைக்கோட்டை)

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலையின் பிரதி அதிபராகக் கடமையாற்றிய புலவர் எம் எஸ். ஸ்ரீ தயாளன் யாழ். மத்திய கல்லூரியின் இந்துநாகரிகத்துறைக்கு நியகப்பட்டுள்ளார். (134)

## புலிகள் வேண்டுகோள்

(நாவற்குழி)

பொதுமக்கள் தங்களுடைய கால்நடைகளான மாடுகளையும், ஆடுகளையும், கட்டாக்காலிகளாகவிடாமல் தகுந்த முறையில் பராமரிக்கும்படி தென்மராட்சிப்பகுதி விடுதலைப்புலிகள், தொழிலாளர் பேரவை, விவசாயிகள் ஒருமித்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மீறுவோர் மீது குற்றப் பணம் அறவிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (107)

## வீதிகள் புனரமைப்பு

(காங்கேசன்துறை)

பலாலி-வசாவிளான் பிரதான வீதி பாதுகாப்புக் காரணமாக மூடப்பட்டதால் பொதுமக்களது உபயோகத்திலிருந்துவரும் அதையடுத்துள்ள மூன்று வீதிகள் உடனடியாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. [redacted]

பலாலி-வசாவிளான் பிரதான வீதி கடந்த பலவருடங்களாக பாதுகாப்புக் காரணமாக மூடப்பட்டுள்ளதால் விமானநிலையத்திற்குச் செல்லவும், மற்றும் போச்குவரத்திற்கும் அதையடுத்துள்ள வீதிகளை பொதுமக்கள் உபயோகித்து வந்தனர்.

வாகனங்கள் அடிக்கடி சென்று வந்ததால் இந்த வீதிகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையிலுள்ளன.

பலாலி- தம்பாலை வீதி, ஸ்ரீவல்லிபுரம் வீதி, கல்லடி வேலுப்பிள்ளை வீதி ஆகிய மேற்படி வீதிகளை புனரமைப்புச் செய்ய யாழ். அரசாங்க அதிபரால் 4 லட்சத்து 27 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி கிடைத்ததும் உடனடியாக இந்த வீதிகள் புனரமைப்புச்செய்யப்படுமென வலி வடக்கு பிரதேச சபை தொழில்நுட்ப அத்தியட்சகர் திரு. க நித்தியானந்தன் தெரிவித்தார். (86)

### இலங்கை - இந்திய உறவில் மாற்றங்கள் ஏற்படும்

# புலிகளுடனான உறவை பாரதம் புதுப்பிக்கும்!

## புதுடில்லியில் ஆலோசனை நடக்கிறது

(நமது வெளிநாட்டுச் செய்திச் சேவை)

இலங்கைக்கான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய அறிகுறிகள் காணப்படுகின்றன.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் முன்னைய அரசு மேற்கொண்டிருந்த கொள்கைகளுக்கு நேர்மாறாக புதிய கொள்கை மாற்றம் அமையும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லியிலிருந்து வெளியாகும் அரசியல் அவதானிகளின் கணிப்பின்படி, இம்மாத இறுதிக்குள் இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறியதன் பின்னர் இலங்கைக்கான இந்தியாவின் கொள்கை மாற்றம் பற்றிய அறிவித்தல் வெளிவரும் என்று நம்பப்படுகிறது.

இதுசம்பந்தமான ஆலோசனைகள் தற்போது புதுடில்லியில் மேற்கொள்ளப் பட்டுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன்படி, இந்திய மத்திய அரசு இலங்கையில் வடக்கு-கிழக்கு பகுதியில் செல்வாக்குப் பெற்றுள்ள விடுதலைப் புலிகளுடன் உறவுகளை புதுப்பித்து மேம்படுத்தி இலங்கையுடனான சுமுக உறவைப் பேண விரும்புகிறது என்று புதுடில்லி வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் ஆட்சியில் ஏற்பட்ட மாற்றம் வடக்கு-கிழக்கிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன் மூலம் தமிழக முதல்வர் இப்பகுதியில் சுமூகநிலை தோன்ற விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையுடனான உறவில் 'திருப்தி'கரமாகச் செயல்படும் பட்சத்தில் ராஜீய மட்டத்தில் இந்தியாவின மதிப்பு அதிகரிக்கலாம் என்றும் புதுடில்லி வட்டாரங்கள் ஹேஸ்யம் கூறும் அதே நேரத்தில் இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தானுடனான உறவில் ஏற்பட்டுள்ள விரிசலைத் தவிர்க்கும் பொருட்டும் இலங்கையுடன் இந்தியா சுமுக உறவைப் பேணவிரும்புகிறது என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது,

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான முக்கிய பேச்சுக்கள் ஜனாதிபதியின் செயலாளர் மட்டத்தில் இடம்பெற்றுவருகிறது. இறுதிச் சட்டநடவடிக்கை குறித்து ஜெனிவா சென்றுள்ள சட்டமா அதிபர் திரு. சுனில் டி சில்வா நாடு திரும்பியதும் மேற்கொள்ளப்படும்.

எனினும், மாகாணசபையைக் கலைப்பதா அல்லது மாகாணசபைகளின் அதிகாரங்களை ஜனாதிபதியா அல்லது கவர்னரா கையேற்பது என்பது பற்றிய முடிவு அமைதிப் படையின் வெளியேற்றத்தைப் பொறுத்து அமையுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

### ஆயுதங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்காக மேற்படி வீடமைப்புத் திட்டப்பகுதியில் திடீரென உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அழைத்துவரப் பட்டனர். சிங்களவர் ஒருபுறமாகவும், தமிழர், முஸ்லிம்கள் மற்றொரு புறமாகவும் நிறுத்தப்பட்டனர். வீட்டுச் சொந்தக்காரர்களைவிட ஏனைய வெளியார் அனைவரும் வேறொரு இடத்தில் நிறுத்தப் பட்டனர்.

இதன்பிறகு முகமூடிகள் அழைத்துவரப்பட்டனர் குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த அனைவரின் முன்னிலையிலும் முகமூடிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தத்தேடுதல் நடவடிக்கையின் போது சிங்களவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. இது போன்ற தேடுதல் நடவடிக்கைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக முக்கிய நகரப்பகுதிகளில் மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### ஜி. சி. ஈ.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலை மகாவித்தியாலத்தில் பரீட்சை முடிவுகள் பற்றிய விபரங்கள் எமக்கு நேற்று முதலில் கிடைத்தன.

இதன்படி சம்பந்தப்பட்ட மகாவித்தியாலயத்திலிருந்து 36 மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு அனுமதியைப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

கலைப்பிரிவிலிருந்து மூன் மாணவர்களும், வர்த்தகப் பிரிவிலிருந்து ஏழு மாணவர்களும், விஞ்ஞானப் பிரிவிலிருந்து இரண்டு மாணவர்களும மேற்படி மகாவித்தியாலயத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

### மாகாணசபை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

"திரு. வரதராஜப்பெருமாளின் அறிவிப்பு மூலம் மாகாண சபையில் ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ என்.டி.எல்.எவ் வின் 58 பதவிகளும் காலியாகியுள்ளன. ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களின் பதவி காலியாகவில்லை. எனவே காலியான 58 இடங்களுக்கு மாத்திரம் தேர்தலை நடத்த வேண்டும். மாகாண சபையைக் கலைக்கக்கூடாது" என்றும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### இந்திய அமைதிப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் இணைந்த பகுதி. இதில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடு பொறுத்துக் கொள்ள முடியாதது'' என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (சி)

### காரைநகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்வலம், கருங்காலியில் இருந்து ஆலடியில் உள்ள விடுதலைப் புலிகள் முகாம் வரை நடைபெற்றது.

ஊர்வலத்தின் முடிவில் அதில் கலந்துகொண்டோர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் இடம் கையளிக்கப்பட்டது. அதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் அங்கு உறுதியளித்தார். (சி)

### புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டி. எல்.எப். பிரதான முகாம்கள் மூடப்பட்டுள்ளன. இவ்விரு இயக்க உறுப்பினர் எவரும் தற்போது நகரில் இல்லை.

உவர்மலையில் மட்டும் சில 'ரெலோ' உறுப்பினர் நடமாடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவர்களும் இரண்டொரு நாட்களில் இடம்மாறி விடுவார்கள் எனக்கூறப்படுகிறது.

சீனன் குடாவில் தங்கியிருக்கும் அமைதிப்படையினர் ஒவ்வொரு முகாம்களிலிருந்தும் மூட்டை முடிச்சுகளுடன் தினமும் வெளியேறி வருகிறார்கள் அநேகமாக இம்மாதம் 15ம் திகதியளவில் அவர்கள் நகரை விட்டு முற்றாக வெளியேறி விடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருமலை நகரில், அமைதிப் படையினர் வெளியேறிய பகுதிகளில் இலங்கை பொலிசார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்ன நேற்று இங்கு வந்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டு, இங்குள்ள அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

## யாழ். தேர்தல் அலுவலகம் வீடமைப்பு செயலகத்தில்

(மானிப்பாய்)

யாழ் தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் முதல் வீடமைப்புச்செயலகத்தில் இயங்கி வருகிறது.

யாழ். பழைய செயலகத்தில் இயங்கிவந்த இவ்வலுவலகம், கடந்த 87ம்ஆண்டுப் பிற்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டதுடன், இந்திய அமைதிப் படையினர் இங்கு முகாமிட்டிருந்தனர்.

இதனால் இவ்வலுவலகம், இதுவரை காலமும் யாழ். செயலகத்தில் இயங்கிவந்தது குறிப்பிடத்தது.

### தமிழ்ப் பிரதேசங்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜன் தலைமையில் யாழ்ப்பாணம மனோகரா திரையரங்கில் நேற்றுக் காலை இக்கூட்டம் நடைபெற்றது.

திரு டொமினிக்தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "பனைவள அபிவிருத்தியில் பங்குகொண்டு அதன் மூலம் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்தும் ஊழியர்களின் நலன்கருதி நாம் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். இதனால்இத்துறையை நம்பிவாழும் அறுபத்தையாயிரம் குடும்பங்கள் தமிழ் ஈழத்தில் நன்மையடைவதுடன், இத்துறையை பொருளாதார வளமிக்க துறையாகவும் அபிவிருத்திசெய்யலாம். தமிழ் பிரதேசங்களில் எவரும் ''லோவைன்'' விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். கசிப்பு விற்பனை, கள்ளசாராய உற்பத்தி முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. சாராயத் தவறணைகள் அனைத்தும் மக்கள் அதிகம நடமாடாத இடத்துக்கு மாற்றப்படும். பனையை நம்பி வாழும் சகல தொழிலாளர்களும் அவர்களுக்கான சங்கங்களில் உறுப்புரிமையைப் பெற வேண்டும் சகல ஊழியர்களுக்கும் வருடாந்த ஊக்குவிப்புத் தொகை பத்துவீதத்துக்கு குறையாமல் நிர்வாகம் வழங்கவேண்டும். சகல துறைகளிலும் நிர்வாகிகள் அபிருத்திக்கான துறைகளில் ஈடுபட வேண்டுமென்றும் கூறினர்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் தொழிற்சங்க மையப் பொறுப்பாளர் திரு. கே. சிவபாதம் உரையாற்றுகையில ''தமிழீழத்தில் ஒரு துறையைச் நேர்ந்தவர்கள் என ஒரு சங்கம் இருப்பதை நீக்க வேண்டும். சாதிக்கு சாவுமணி அடித்து தமிழீழத்தில் சமதர்ம ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும வேளையில் சாதியின் பெயரால் சங்கங்கள் இருப்பதையோ, ஒருதுறையில் ஈடுபட்டுள்ளவர்களை அத்துறைக்கு ஒரு சங்கமென இருப்பதோ பிழையானது ஈழத்தில் ஒரே தொழிற்சங்கமே இருக்க வேண்டும். அது உழைக்கும் வர்க்கத்திற்கான சங்கமாக இயங்கவேண்டும் இன்று பனையைப் பொறுத்தவரையில் அதனை அபிவிருத்திசெய்யப் பல திட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டியுள்ளது. இதற்குச் சங்கம், சமாசம், சபை என்று பிரிந்து நிற்காமல் எல்லோரும் ஒரே நேரத்தில் ஒற்றுமையாகச் செயற்படவேண்டியது அவசியம்.

இன்று கூட்டுறவுத் துறையில் அமுலபடுத்தப்பட்டிருக்கும் சில சட்டங்கள், அடிமட்டத் தொழிலாளரின் மேம்பாட்டுக்கு வழிகாணவில்லை. தொடர்ந்தும் சுரண்டப்படுபவர்களாக உள்ளனர். இதையெல்லாம் இனம்கண்டு நாம் அதனை நீக்குவோம் என்றார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எம். சபாரத்தினம் பேசுகையில், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின்செயற்பாடுகள் வளர்ச்சி காணப் படவேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளை நாம் தொடர்ந்து செய்வோம் என்றும் கூறினர்.

பொதுக் கூட்டத்துக்கு யாழ், மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து பெருந் தொகையானோர் வந்திருந்தனர் [12]

## இராணுவ தளபதி ஓய்வுபெறுகிறார்?

(கொழும்பு)

இலங்கை இராணுவ தளபதி ஜெனரல் ஹமில்ரன் வணசிங்க விரைவில் ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிய வருகிறது

புதிய இராணுவ தளபதியாக பிரதம பொறுப்பதிகாரி சிசில் வைததியரட்ண நியமிக்கப் படலாமெனவும் பாதுகாப்பு வட்டாரங்களில் அனுமானம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஓய்வூதியம தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு யாழ். செயலக ஓய்வூதியக் கிளையில் வவுசசர்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. ஆனால் பணம் பெறுவதில் தாமதம் ஏற்படலாம் எனத் தெரிய வருகிறது.

எப்படியிருந்த போதிலும் அடுத்த வாரத்துக்குள் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பணம் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது,

கொழும்பிலிருந்து வவுச்சர்கள் வந்தபோதிலும், பணம் வந்து சேராததந்த இதற்குக் காரணமாகும். [15]

### இராமேஸ்வரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் சுங்கப்பகுதிச் சோதனை இடம்பெற்ற கட்டிடத்திலேயே அமைதிப்படையினர் தங்கியிருந்தனர். தற்போது இக்கட்டிடம் சீர்செய்யப்பட்டு கப்பல் சேவை ஆரம்பிக்கப் பட்டதும் சுங்க சோதனை இங்கேயே நடாத்தப்படும்.

தலைமன்னார்துறை ரயில் நிலையத்திலும், புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்தியாவிலிருந்து தக்க பதில் கிடைத்ததும், தலைமன்னார் - கொழும்பு ரயில் சேவையும் விரைவில் ஆரம்பிககப் படும் என்று அவ்வட்டாரங்கள் மேலும்தெரிவித்துள்ளன.

## இன்று

(வடமராட்சி)

1987ல் வன்னிக்காட்டில் இந்தியப் பாதுகாப்பில் இருந்த போது கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்க லெப்ரினன் கேணல் ஜொனியின் 2வது நினைவஞ்லிக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை புலோலி கிராமக் கோட்டடிச் சந்தியில் நடைபெறவிருக்கிறது. (51)

### பெண் போராளிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குருநகரில் தண்ணீர் தாங்கிப் பகுதியில் மாலை 6-00 மணிக்கும், நீர்வேலி கந்தசுவாமி கோயிலடியில் மாலை 7-00 மணிக்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இங்கு, புலிகள் கலாசாரப் பிரிவினரின் 'நடந்துவந்த பாதை' வில்லிசையும், 'விடியலைத் தேடுவோம்' என்ற நாடகமும் இடம்பெறும்.

அனைத்து மக்களையும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மகளிர் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

### வடக்கு - கிழக்கு

# மாகாணசபையின் தலைவர் பதவியை நான் தொடர்ந்து வகித்து வருவேன்

## மாகாணசபைத் தலைவர் தகவல்

(கொழும்பு)

''வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தலைவர் பதவியை, நானே வகித்துவருகிறேன். அந்தப் பதவியை நான் தொடர்ந்தும் வகித்துவருவேன்.''

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் தலைவர் திரு பொன்ராம ராஜகாரியர் நேற்று திருகோணமலையில் இவ்வாறுதெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

''அரசாங்கம் கேட்டுக் கொண்டபடி, நான் எனது ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டேன்; இனி எனக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்ததாகும்.

வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர ஈழப் பிரகடனத்துக்கு எதிராக அரசாங்கம் என் மீது நடவடிக்கை எடுக்குமேயானால், அரசாங்கம் அந்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதற்கு அது சான்றாகவே அமையும்'' என்றார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.